KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

# கலாநிலயம்

## A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஸ்ரீ மார்ச் மீ 9உ [No. 10

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 181
2. தமிழ்ப் பாடம் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 183
3. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 7-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 186
4. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 187
5. கலித்தொகை (பாலைக்கலி 7.) T. A. கனகசபாபதி முதலியார் 189
6. வில்லிபாரத விளக்கம் (சூது போர்ச் சருக்கம்) T. S. நடராஜப் பிள்ளை B. A. B. L. 190
7. அப்பர் (64 கலை-வியாகரணம்-குற்றியலுகரம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 192
8. பொதிகை நிகண்டு (ககர வருக்கம்) S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., 193
9. யாப்பிலக்கணம் (செய்யுள்—வெண்பா) வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 194
10. காற்றுமழை (அங்கம் 1. களம் 2.) Shakespeare's - Tempest 195
11. வர்த்தமானம் 199

## கலாநிலயம்

### சொன்னல் விரோதம் 9.

தம்மையுந் துறப்பதே தமது இயற்கையாயுடைய காதல்மாதர் பின்னுஞ் சிலர் தூயசரிதங்களை, மெய்யறி புலமையோர் எழுதிய நாடகங்களிலிருந்து டேய்ன் எடுத்துக் காட்டுகின்றார்.

When we find a constitution of soul so new and capable of such great effects it behoves us to look at the bodies. Man's extreme actions come not from his will, but his nature. In order to understand the great tensions of the whole machine we must look upon the whole—I mean man's temperament, the manner in which his blood flows, his nerves quiver, his muscles act, the moral interpretes the physical and human qualities have their root in the animal species. Consider then the species in this case—namely, the race; for the sisters of Shakespeare's Ophelia and Vergilia, Goethe's Clara and Margaret, Otway's Belvidera, Richardson's Pamela constitute a race by themselves, soft and fair, with blue eyes, lily whiteness, blushing, of timid delicacy, serious sweetness framed to yeild, bend, cling. Their poets feel it clearly when they bring them on the stage; they surround them with the poetry which becomes them, the murmur of streams the pendant willow-tresses, the frail and humid flowers of the country, so like themselves:—

"The flower that's like thy face, pale primrose, nor
The azure harebell, like thy veins; no, nor
The leaf of eglantine, whom not to slander,
Out-sweeten'd not thy breath."

They make them sweet, like the south wind, which with its gentle breath causes the violets to bend their heads, abashed at the slightest reproach, already half bowed down by a tender and dreamy melonoholy. Philaster speaking of Euphrasia, whom he takes to be a page and who has disguised herself in order to be near him says:—

" Hunting the buck
I found him sitting by a fountain side,
Of which he borrowed some to quench his thirst.
And paid the nymph again as much in tears.
A garland lay him by, made by himself
Of many several flowers, bred in the bay
Struck in that mystic order, that the rareness
Delighted me; but ever when he turned
His tender eyes upon 'em, he would weep
As if he meant to make 'em grow again.
Seeing such pretty helpless innocence
Dwell in his face, I asked him all his story.
He told me that his parents gentle dy'd
Leaving him to the mercy of the fields
Which gave him roots; and of the crystal springs,
Which did not stop their courses; and the sun
Which still, he thank'd him, yielded him his light.
Then he took up his garland and did shew
What every flower, as country people hold,
Did signify; and how all ordered thus,
Express'd his grief: And to my thoughts did read
The prettiest lecture of his country art

That could be wished....... I gladly entertained him,
Who was as glad to follow; and have got
The trustiest, loving'st and the gentlest boy
That ever master kept."

The idyl is self produced among these human flowers: the dramatic action is stopped before the angelic sweetness of their tenderness and modesty. Sometimes even the idyl is born complete and pure and the whole threatre is occupied by a sentimental and poetical kind of opera. There are two or three such plays in Shakespeare; in rude Jonson, "*The Sad Shepherd*"; in Fletcher, "*The Faithful Shepherdess*", Ridiculous titles now-a-days, for they remind us of the interminable platitudes of D'Urfe or the affected conceits of Florian; charming titles if we note the sincere and overflowing poetry which they contain. Amoret, the faithful shepherdess lives in an imaginary country, full of old Gods, yet English like the dewy verdant landscapes in which Rubens sets his nymphs dancing;—

"Thro' yon same bending plain
That flings his arms down to the main
And thro' these thick woods, have I run
Whose bottom never kiss'd the sun
Since the lusty spring began..."
"For to that holy wood is consecrate
A virtuous well, about whose flowery banks
The nimble-footed fairies dance their rounds,
By the pale moon-shine, dipping often times
Their stolen children, so to make them free
From dying flesh and dull mortality..."
"See the dew-drops, how they kiss
Every little flower that is;
Hanging on their velvet heads
Like a rope of christal beads,
See the heavy clouds low falling,
And bright Hesperus down calling
The dead night from underground."

These are the plants and the aspects of the ever fresh English country, now enveloped in a pale diaphanous mist, now glistening under the absorbing sun, teeming with grasses so full of sap, so delicate, that in the midst of their most brilliant splendour and their most luxuriant life, we feel that to-morrow will wither them. There on a summer night, the young men and girls after their custom go to gather flowers and plight their troth. Amoret and Perigot are together; Amoret,

"Fairer far
Than the chaste blushing morn or that fair star
That guides the wand'ring seaman thro' the deep."

Modest like virgin and tender as a wife, says to Perigot:—

"I do believe thee: 'Tis as hard for me
To think thee false and harder, than for thee
To hold me foul."

Strongly as she is tried, her heart once given, never draws back. Perigot, deceived, driven to despair, persuaded that she is unchaste strikes her with his sword and casts her bleeding to the ground. The "sullen shepherd" throws her into a well but the god lets fall "a drop from his watery locks" into the wound; the chaste flesh closes at the touch of the divine water and the maiden recovering goes once more in search of him, she loves:—

"Speak if thou be here,
My Perigot! Thy Amoret, thy dear,
Calls on thy loved name......'Tis thy friend
Thy Amoret; come hither, to give end
To these consumings. Look up gentle boy,
I have forgot those pains and dear annoy
I suffered for thy sake, and am content
To be thy love again. Why hast thou rent
Those curled locks, where I have often hung
Ribons and damask roses and have flung
Waters distill'd to make thee fresh and gay,
Sweeter than nosegays on a bridal day?
Why dost thou cross thine arms and hang thy face
Down to thy bosom, letting fall apace
From those two little heav'ns upon the ground,
Show'rs of more price, more orient and more round
Than those that hang upon the moon's pale brow?
Cease these complainings, shepherd! I am now,
The same I ever was, as kind and free
And can forgive before you ask of me;
Indeed I can and will."

Who could resist her sweet and sad smile? Still deceived Perigot wounds her again; she falls but without anger.

"...So this work hath end!
Fare well and live; be constant to thy friend
That loves thee next."

A nymph cures her, and at last Perigot, disabused comes and throws herself on his knees before her. She stretches out her arms; in spite of all he had done, she was not changed:—

"I am thy love,
The Amoret, for ever more thy love!
Strike once more on my naked breast, I will prove
As constant still. Oh! could'st thou love me yet
How soon would I my former griefs forget."

Such are the touching and poetical figures which these poets introduce in their dramas or in connection with their dramas, amidst murders, assassinations, the clash of swords, the howl of slaughter, striving against the raging men who adore or torment them, like them carried to excess, transported by their tenderness as the others by their violence; it is a complete exposition as well as a perfect opposition of the feminine instinct ending in excessive self-abandonment and of masculine harshness ending in murderous inflexibility. Thus built up and thus provided, the drama of the age was enabled to bring out the inner depths of man and to set in motion, the most powerful human emotions; to bring upon the stage Hamlet andLear, Ophelia and Cordelia, the death of Desdemona and the butcheries of Macbeth.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.



# தமிழ்ப் பாடம் 60.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[165-வது பக்கத் தொடர்ச்சி]

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான்—செங்கோலாய்
அந்நாளு நாளை யளவென்றா னந்தணன்போய்த்
தென்னளுந் தாரானைச் சேர்ந்து. 38

பதப்பிரிவு:—எம் கோன் மகளுக்கு இரண்டாம் சுயம்வரம் என்று அங்கு ஓர் முரசம் அறைவித்தான் செங்கோலாய் அ நாளும் நாளை அளவு என்றான் அந்தணன் போய் தென் ஆளும் தாரானை சேர்ந்து.

பதவுரை.

அந்தணன் போய் - புரோகிதன் (அயோத்தி நகரத்திற்குச்) சென்று,
தென் - அழகானது,
ஆளும் - தங்கி இருக்கின்ற,
தாரானை - மாலையை அணிந்த இருதுபன்னனை,
சேர்ந்து - அடைந்து,
"செங்கோலாய் - அரசனே,
எம் கோன் - எமக்கு அரசனாகிய வீமராசனது
மகளுக்கு - புத்திரிக்கு,
இரண்டாம் - இரண்டாவதாகிய,
சுயம்வரம் என்று - சுயம்வரம் (நடைபெறும்) என்று சொல்லி,
அங்கு - அவ் வயோத்தி நாட்டில்,
ஓர் - ஒரு,
முரசம் - பேரிகையை,
அறைவித்தான் - அடிப்பித்தான்,
"அ - அந்த, [மும்,
நாளும் - (சுயம்வரத்திற்குக் குறிப்பிட்ட) தின
நாளை அளவு - நாளையின் அளவினையுடையது,"
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—அந்தணன் குறிப்பறிந் தொழுகும் ஆற்றல் மிக்கவன் ஆதலால், தமயந்தியின் கூற்றின் குறிப்புணர்ந்து, தான் எவ்வாறு கூறினால் இருதுபன்னன் உடனே புறப்பட முயல்வான் என்பதைத் தெரிந்துகொண்டு, "அந் நாளும் நாளை அளவு" என்று கூறினான் என்று கவி கூறுவது மிகவும் வியக்கத்தக்கது. ஏனெனில், அந்தணனே அவ்வாறு கூறும்படி செய்வதால், இருதுபன்னன் உடனே விதர்ப்ப நாட்டையடைய விரும்பி, மிக்க விரைவில் தேரைச் செலுத்தும் திறன்வாய்ந்த தேர்ப்பாகனையே தன் தேரைச் செலுத்த ஏவுவான் என்பதும், அவ்வாறு அவன் ஏவுவதற்கு நளனேயன்றி அத்தொழிலில் வல்லார் பிறர் இன்மையால், நளனே அதற்கு இசைய வேண்டி நேரிடும் என்பதும் கருதியே புகழேந்திப்புலவர், "அந்நாளும் நாளை அளவு" என்னும்சொற்களை அமைதிபெறச் சொல்வித்தனர்.

---

வேத மொழிவாணன் மீண்டுஞ் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென்-றோதினான்
என்செய்கோ மற்றிதனுக் கென்றா னிகல்சீறும்
மின்செய்த வேலான் விரைந்து. 39.

பதப்பிரிவு:—வேதம் மொழி வாணன் மீண்டும் சுயம்வரத்தை காதலித்தாள் வீமன்தன் காதலி என்று ஓதினான் என் செய்கோ மற்று இதனுக்கு என்றான் இகல் சீறும் மின் செய்த வேலான் விரைந்து.

பதவுரை.

இகல் - பகைவர்களாகிய இருளை,
சீறும் - கோபித்து நீக்கும், [வீசிய,
மின்செய்த - (வெற்றியாகிய) பிரகாசத்தை
வேலான் - வேலைத் தாங்கிய இருதுபன்னன்,
விரைந்து - அவசரப்பட்டு,
"வேதம்-வேதத்தின் நுண்ணிய பொருள்களை,
மொழி - (ஆராய்ந்து) கூறுகின்ற, [கிதன்,
வாணன்-வாழ்க்கையை யுடையவனாகிய புரோ
வீமன்தன் காதலி - வீமராசனுடைய புத்திரி,
மீண்டும் - மறுபடியும்,
சுயம்வரத்தை - சுயம்வரம் நாட்டுவதை,
காதலித்தாள் - விரும்பினாள்,
என்று ஓதினான் - என்று கூறினானே;
மற்று - அப்படியிருக்க, [தற்கு,
இதனுக்கு-இந்தச் சுயம்வரத்தின் பயனையடை
என் செய்கோ!" - (யான்) யாது செய்வேன்!
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—இந்தக்கவியில் அமைந்துள்ள சொல்நயம் ஆராயத்தக்கது. அந்தணன், 'வீமன்தன் காதலி மீண்டும் சுயம்வரத்தைக் காதலித்தாள்,' என்றுசொல்லியவுடனே, முன்னர்த் தமயந்தியை மணக்கவிரும்பி அவள் சுயம்வரத்திற்குச் சென்றிருந்தும் அவள் மாலைபெறாமல் மனவருத்தத்துடன் தன்னகருக்குத் திரும்பியவனாகையால், இம்மன்னன் இப்பொழுது அந்தணன் கூற்றை மெய்யெனக்கொண்டு தனக்குள் இவ்வாறு பரபரப்புடன் கூறிக்கொண்டனன் எனக் கவி, மாந்தர் மனநிலையினை நன்கு ஆராய்ந்து கூறியிருக்கும் இது கற்போர்க்கு இன்பமும் வியப்பும் விளைக்கத்தகுந்தது. "ஒருபெண் இரண்டாம் சுயம்வரத்தையேற்றுக்கொள்வது நூல்வழக்கிலுமில்லை; உலக வழக்கிலும் கேள்விப்பட்டிலோம். அங்ஙனமிருக்க அயோத்திமன்னனாகிய இருதுபன்னன் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என்று அந்தணன் உரைத்ததை மெய்யென வெங்ஙனங் கொள்ளுதல் இயலும்?" என்று இந் நூலைக் கற்போர் எண்ணுதல் கூடும். அவர்களுக்கு அவ்வித எண்ணந் தோன்றாதபடி கவி சொற்றொடர்களை அமைத்திருக்கின்றார். 'வேதமொழி வாணன்' என்று இருதுபன்னனே அந்தணனைக் குறிப்பதாகக் கவி கூறுகின்றார். ஆதலின், வேதத்தின் நுண்பொருளை நன்காய்ந்து, அவ் வேதநெறியில் தானொழுகியும் பிறரை யொழுகும்படிசெய்தும் வருதலையே தன் வாழ்க்கையாகக் கொண்டவன் அந்தணன் என்பதும், அத்தகைய சீரிய ஒழுக்கமுடையோன் மெய்யன்றிப் பொய்புகலான் என்பதும் அத்தொடருக்குப் பொருளாகக்கொண்டு இருதுபன்னன் தனக்குள் தானே இவ்வாறியம்பினன் என்பது உய்த்துணரக் கிடக்கின்றது. இருதுபன்னன், 'இகல் சீறும் மின் செய்த வேலான்' எனினும், பகைவரையடக்குந் திறல் அவனுக்குண்டேயன்றித் தன்மனத்தை யடக்குந் திறன் பெற்றிலன் என்பதும், தாம் விரும்பிய

மங்கையர்பால் மனத்தைப் போக்குபவர் பெருவீரரெனினும் தம் வன்மையிழந்து பெரிதும் ஆராய்ச்சியின்றிக் காரியங்களைச் செய்வாரென்பதும் தோன்றக் கவி இங்ஙனங் கூறியதும் வியக்கத்தக்கதே. விரைந்து கூறினன் என்னும் சொற்களின் அமைப்பு, அப்பொழுது இருதுபன்னன் கொண்ட அமைதியின்மையை—பரப்பரப்பை—இனிது விளக்கி நிற்கின்றது. வாணன் என்னுஞ்சொல் வாழ்நன் என்பதன் மரூஉவாகும். இச்சொல் மதிவாணன், கவிவாணன், அம்பலவாணன், தஞ்சைவாணன், பாவாணன் எனப் பிறசொற்களோடமைந்து, வாழ்கின்றவன் என்னும் பொருள்தந்து நிற்கக் காணலாம்.

---

குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்திழையா ளின்று—பறிபீறி
நெல்லிற் பருவரா லோடு நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல். 40.

பதப்பிரிவு:—குறையாத கற்பினாள் கொண்டானுக்கு அல்லால் இறவாத ஏந்து இழையாள் இன்றுபறி பீறி நெல்லில் பருமை வரால் ஓடும் நெடுமை நாடா சொல்லப்படுமோ இ சொல்.

பதவுரை.

பறி - (மீன்பிடிப்போர் கட்டுகின்ற) கூடையை,
பீறி - கிழித்துக்கொண்டு,
நெல்லில் - நெல்வயல்களில்,
பரு வரால் - பருமையான வரால் மீன்கள்;
ஓடும் - (நீரில் நீந்தி) ஓடுகின்ற,
நெடு நாடா - (நீர் வளப்பமாகிய) பெருமையுடைய அயோத்திக்கு அரசனே,
குறையாத - குறைவில்லாத,
கற்பினாள் - கற்பை உடையவளாகிய தமயந்தி,
கொண்டானுக்கு - தன்னை மணம்புரிந்துகொண்ட நாயகனிடத்து,
அல்லால் - அல்லாமல்,
இறவாத - கடந்து (மற்றவர்களிடத்தில் மனம்) செல்லாத,
ஏந்து இழையாள் - (அழகைத்) தாங்கிய ஆபரணங்களை யுடையவள்,
இன்று - (அவள் தன் நாயகனை விட்டுப் பிரிந்து வருந்தி இருக்கும்) இந்த நாளில்,
இ சொல் - (இரண்டாம் சுயம்வரம் என்னும்) இந்தச் சொல்லானது,
சொல்லப்படுமோ - (அவளைப் பற்றிச்) சொல்லக் கூடுமோ?

விரிவுரை:—நளன், அந்தணன் கூறிய கூற்றையும் அதனால் இருதுபன்னன் கொண்ட மனமயக்கத்தையும் அறிந்தான் என்பதனைக் கவி குறிப்பாக உணர்த்தி மேற் செல்கின்ற நயம் கண்டுப் பாராட்டத்தக்கது. இச்செய்யுளில் அந்தணன் கூற்றை உண்மையென எளிதிலெண்ணி மனமயக்கங் கொண்ட இருதுபன்னனது ஓராமையையுணர்ந்த நளன் அவன் அறியாமைக்கு இரங்கிக் கூறுவதுபோல் புலவர் இச்செய்யுளை அமைத்திருக்கின்றனர். இருதுபன்னன் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரத்தைப் பற்றி நளனை யாதும்வினவினானில்லன். அங்ஙன மிருந்தும், நளன் அம்முறையில் அவனுக்குப் புத்திபுகட்டத் துணிந்தது தகுமோ எனில், உலகியலை நோக்க அது தகுமென்றே தோன்றுகின்றது. மக்கள் தம் அன்புக்குரியவர்களைப்பற்றிப் பிறர் குறைவாக வெண்ணுங்காலங்களில் அங்ஙனம் எண்ணுபவர்கள் அறியாமையை அவர்களுக்குக் குறிப்பாக உணர்த்தி, அங்ஙனம் கருதுதல் பிழையென்று கூறுதல் இயல்பு. பெரிய நாட்டைக் காக்கும் மன்னனாயினும், நீ சிறிதும் ஆராயாமல் செயல்புரியும் குணமுடையவன் என்பது தோன்ற, நளன் 'நெடுநாடா' என இருதுபன்னனை விளிப்பதும் கவனித்தற் குரியது. அதுவுமன்றி, தாண்டப்படாது என்று தடுப்பதற்கமைந்த பறியைத் தன்கொழுப்பினால் கீறிக்கொண்டு வயலில் பாய்கின்ற வரால் மீன்களை உடைய நாட்டினது தன்மையை, வரம்பு கடந்து பிறன்மனையை மணக்கவிழைகின்ற அம்மன்னனிடத்தும் காணலாம். முன், "பிள்ளை மீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை" என்று தமயந்தியைக் கூறியதுபோல் இதுவும் உள்ளுறை உவமையின்பாற்படும்.

---

## இலக்கணம்

சென்றவாரம், உதடு என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள உகரம் குறுகி உச்சரிக்கும் என்றும், ஆனால் உதவு என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள உகரம் குறுகி உச்சரிக்காமல் தன் ஒரு மாத்திரையையும் பெற்றே ஒலிக்கு மென்பதையும் சொன்னேன். டு என்பது ட் உ என்ற இரண்டு எழுத்துக்களால் ஆனது. அந்த ட் என்னும் மெய், க் ச் த் ட் ப் ற் என்னும் ஆறு எழுத்துக்களில் ஒன்றாதலால், வல்லின மெய். ஆதலாற்றான் உதடு, என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள உ குறுகியது. உதவு என்பதில் ஈற்று உகரம் வ் என்னும் இடையின மெய்யின்மேல் ஏறியிருக்கின்றது. இடையின மெய்யின்மேலும் மெல்லின மெய்யின் மேலும் ஏறிய உகரம் ஈற்றில் வந்தாலும் குறுகாது. அவைகளெல்லாம் முற்றியலுகரங்கள். எனவே, குற்றியலுகரத்தின் இலக்கணம் இது:—

I. க் ச் ட் த் ப் ற், என்ற ஆறு வல்லின மெய்களில் ஏதாவது ஒன்றின்மேல் ஏறிக் கு சு டு து பு று என நிற்றல் வேண்டும்.

II. அப்படி வல்லின மெய்யின்மேல் ஏறி வார்த்தைக்குக் கடைசியில் நிற்க வேண்டும்.

III. அப்படி நிற்கின்ற வார்த்தை இரண்டே எழுத்துக்களையுடைய வார்த்தையாயிருக்குமானால், முதல் எழுத்து நெடிலாக இருக்கவேண்டும்.

IV. இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய வார்த்தையா யிருக்குமானால், அவ்வெழுத்துக்கள் எவையாயிருந்தாலும், அவ்வார்த்தையின் ஈற்றில் வல்லினமெய்யின்மேல் ஏறிவரும் உகாம் குற்றிய லுகரமே.

குற்றியலுகரம் என்பது இன்னதென்பதைக் கவனித்தோம். இனி அந்தக் குற்றியலுகரம் தான் ஏறி இருக்கும் மெய்யெழுத்திற்கு முன் நிற்கும் எழுத்தினால், அதாவது அந்த மெய்யெழுத்தைத் தொடர்ந்து நிற்கும் எழுத்தினால் வெவ்வேறு பெயர் பெறுவதைக் கவனிப்போம்: சுக்கு, கச்சு, மட்டு, பத்து, உப்பு, புற்று என்னும் சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் குற்றியலுகரம் ஏறியிருக்கின்ற மெய்யெழுத்தை க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லின மெய்யெழுத்துக்கள் தொடர்ந்து வந்திருக்கின்றன அல்லவா? இவ்வாறு வல்லின மெய்யெழுத்துக்களால் தொ



-ப்பட்டு வரும் குற்றியலுகரம் வன்தோடர்க் குற்
-லுகரம் என்று சொல்லப்படும். சங்கு, பிஞ்சு,
-ண்டு, சிந்து, கம்பு, கன்று என்னுஞ் சொற்களில்
-ள்ள குற்றியலுகரம் ஏறியிருக்கும் மெய்யைத் தொ
-ர்ந்து, ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் மெல்லின
-மய்யெழுத்துக்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இச்
-சாற்களில் வந்துள்ள குற்றியலுகரத்தை மேன்தோ
-ர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகிறோம். நோய்
-, மார்பு, போழ்து, வெள்கு, பல்கு என்னுஞ் சொற்
-ளைக் கவனியுங்கள். இவற்றிலுள்ள குற்றியலுகரம்
-றிய மெய்யெழுத்தைத் தொடர்ந்து இடையினமெ
-யெழுத்துக்கள் வந்திருப்பதால் இவற்றை இடைத்
-தாடர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகின்றோம்.
-கு, பாசு, ஏடு, போது, சேறு என்னும் சொற்களில்
-ற்றில் உள்ள குற்றியலுகரம் ஏறிய மெய்யெழுத்தை
-, ஏ, போ, சே என்னும் உயிர் நெட்டெழுத்தும்
-யிர்மெய் நெட்டெழுத்தும் தனித்தனியாகத் தொ
-ர்ந்து வந்திருக்கின்றன. ஆகையால் இந்தச்சொற்க
-ளில் ஈற்றில் உள்ள குற்றியலுகரத்தை நெடில் தோ
-ர்க் குற்றியலுகரம் என்கின்றோம். அஃது, இஃது
-என்னுஞ் சொற்களில் உள்ள குற்றியலுகரம் ஏறிய
-மெய்யைத் தொடர்ந்து ஆய்த எழுத்து வந்துள்ளது.
-ஆதலால், இச்சொற்களில் உள்ள குற்றியலுகரத்தை
-ஆய்தத் தோடர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகி
-றோம். வரகு, அரசு, குருடு, பிறிது, மரபு, பயறு என்
-னும் சொற்களில் குற்றியலுகரம் ஏறியுள்ள மெய்யெ
-ழுத்தைத்தொடர்ந்து ர, ரு, றி, ய என்னும் உயிர்மெய்
-யெழுத்துக்கள் வந்திருக்கின்றன. ஆனால், இவ்வுயிர்
-மெய்யெழுத்துக்களைக்கொண்டு இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரத்தை உயிர்மெய்த்தொடர்க் குற்றியலுகரம் என்று சொல்லிவிடுதல் கூடாது. ஏனென்றால், இச்சொற்களில் குற்றியலுகரம் ஏறியுள்ள மெய்யெழுத்தைத் தொடர்ந்து நிற்பவை உயிர்மெய்யெழுத்துக்களாயினும், ஓசையைக்கவனிக்கும்போது உயிர் ஓசையே அவ்வாறு தொடர்ந்து நிற்பதை நம் செவியால் உணரலாம். உதாரணமாக, அரசு என்னும் பதத்தை எடுத்துக்கொள்ளுவோம். இச்சொல்லில் உள்ள எழுத்துக்களைஓசைக்குஏற்றபடிபிரித்துஅமைப்போமானால் அவை அ ர் அ ச் உ என அமையும். இப்பொழுது கடைசியில் உள்ள உ என்னும் எழுத்துக் குற்றியலுகரம். அதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள ச் என்னும் எழுத்து அந்தக் குற்றியலுகரம் ஏறியிருந்த மெய்யாகும். அந்த மெய்யெழுத்தைச் சார்ந்து நிற்கும் ஓசை அ என்னும் உயிர் ஓசையே அன்றி, வேறெந்த ஓசையுமன்று. ஆகையால், இப்படி உயிர்மெய்யெழுத்தால் தொடரப்பெற்ற குற்றியலுகாத்தை உயிர்த்தோடர்க் குற்றியலுகரம் என்றே சொல்லுகிறோம்.

எனவே குற்றியலுகரமானது தான் ஏறியிருக்கும் மெய்யெழுத்திற்குப் பக்கத்தில் அமையும் எழுத்தினால் ஆறுவகைப்படும் என்பதை அறிகிறோம். அவை வன்தோடர்க் குற்றியலுகரம், மேன்தோடர்க் குற்றியலுகரம், இடைத்தோடர்க் குற்றியலுகரம், நெடில் தோடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தோடர்க் குற்றியலுகரம், உயிர்த்தோடர்க் குற்றியலுகரம் என்பவை

1. ஈற்றிற்கு அயலெழுத்து வல்லின மெய் எழுத்தாக இருந்தால், வன்தொடர்க் குற்றியலுகரம்:— பத்து, கட்டு, கச்சு, பற்று.

2. ஈற்றிற்கு அயலெழுத்து மெல்லின மெய்யாக இருந்தால் மென்தொடர்க் குற்றியலுகரம்:—வண்டு, பங்கு, பத்து, சென்று, பஞ்சு.

3. ஈற்றிற்கு அயலெழுத்து இடையின மெய்யாக இருந்தால், இடைத்தொடர்க் குற்றியலுகரம்:— கொய்து, நல்கு, போழ்து.

4. ஈற்றிற்கு அயலெழுத்து ஃ என்னும் ஆய்த எழுத்தாக இருந்தால், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம். எஃகு, அஃது.

5. ஈற்றிற்கு அயலெழுத்து மெய்யெழுத்தாகவேனும் ஆய்தவெழுத்தாகவேனும்இல்லாமல் எந்தஇன உயிர்மெய்யெழுத்தா யிருந்தாலும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரமே. அது வல்லினமாயிருந்தாலும் மெல்லினமாயிருந்தாலும், இடையினமா யிருந்தாலும் குறிலாயிருந்தாலும், நெடிலா யிருந்தாலும், அந்த ஈற்றுக்கு அயலெழுத்து உயிர்மெய் யெழுத்தாயிருந்தால் அந்தத்தொடரிலுள்ள உகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரந்தான்:—

படகு, கழுது, கிணறு, பலாசு, இவைகளெல்லாம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களே. படகு, என்னும் சொல்லில் ஈற்றிற்கு அயல் எழுத்தாகிய ட வல்லினமாயிருப்பதால் அந்தக் குற்றியலுகரத்தை வன்தொடர்க் குற்றியலுகரம் என்று எண்ணுதீர்கள். ட, வல்லின உயிர்மெய்எனவேஇது உயிர்த்தொடர்தான். வன்தொடர்க் குற்றியலுகர மாகவேண்டுமானால், ஈற்றிற்கு அயலெழுத்து வல்லின மேய் ஆக அன்றோ இருக்கவேண்டும்? உட்கு, என்றிருந்தால் ட் என்பது வல்லின மேய்யாதலால் இது வன்றொடர்க் குற்றியலுகரம். அவ்விதமே, கழுது, இடைத்தொடர் அன்று; கிணறு மென்றொடரன்று. இவைகளின் ஈற்றிலுள்ள உகரங்கள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களே.

பலாசு என்பதுகூட உயிர்த்தொடர்தான். நெடில் தொடர் அன்று. ஈற்றிற்கு அயலெழுத்து, பலாசு, இறும்பூது, என்னும் சொற்களில்போல் ஈற்றுக்கு அயல் நெடிலாக இருப்பதால் அது நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று நினைக்கக்கூடாது.

6. இரண்டே எழுத்தை உடைய சொற்களின் கடைசியில் உள்ள உகரம் குற்றியலுகரமாயிருக்கும் போது முதலெழுத்து நெடிலாகத்தான் இருந்து தீர வேண்டி இருக்கின்றது. அப்பொழுதுதான் அதற்கு நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்.


**எமாங்கதத் திளவரசன்**

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவேரர்

**செந்தமிழ்க்காதை.**

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

4-ம் பத்து, 7-ம் தசகம்.

[169-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்.

நோக்கி நோக்கி யுன்னைக் காண்பான்
யானென தாவியுள்ளே
நாக்கு நீள்வன் ஞான மில்லை
நாடோறு மென்னுடைய
ஆக்கை யுள்ளு மாவி யுள்ளு
மல்ல புறத்தின்னுள்ளும்
நீக்க மின்றி யெங்கு நின்றாய்
நின்னை யறிந்தறிந்தே.

பொழிப்புரை:—எனது ஆக்கை யுள்ளும் பிராணனுள்ளும் மற்றும் புறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் நிற்கின்றாய் ஆயினும் எனக்கு நின்னைக் காட்டாதொழிவதால் உனக்கு அது இஷ்டமில்லை யென்பது வியக்தமாய் எனக்குத் தெரிந்திருந்தும் உன்னை நோக்கி நோக்கி நானென்னுள்ளே ஆசைப்படா நிற்கின்றேனே, இது என்ன அறிவீனம்.

7-ம் பாசுரம்.

அறிந்த றிந்து தேறித் தேறி யானென தாவியுள்ளே
நிறைந்த ஞான மூர்த்தியாயை நின்மல மாகவைத்து
பிறந்துஞ் செத்து நின்ற டரும் பேதைமை தீர்ந்தொ
[ழிந்தே
னறுந் துழாயின் கண்ணி யம்மா நானுன்னைக் கண்டு
[கொண்டே

உரை:—நறுந் துழாயின் - வாசனையுள்ள துளபத்தால் தொடுத்த, கண்ணி—மாலை யணிந்த, அம்மா - என் தாய்போன்ற ஸ்வாமியே, கண்டுகொண்டு - எந்த ஸ்வரூபமுள்ளவனென்று தெரிந்து, அறிந்தறிந்து - செவ்வனே அறிந்து அறிந்து, தேறித் தேறி - பலவிதமாய் மனனஞ் செய்யும்போது ஐயம் திரிபுகள் ஒன்றுமில்லாமல் உண்மைகளை உணர்ந்து, நிறைந்த ஞான மூர்த்தியாயை - பூரணமான ஞானரூபனான உன்னை, எனது ஆவியுள்ளே - என் அந்தக்கரணத்தில், நின்மலமாகவைத்து - விசதமாயும் கண்ணால் கண்டது போலும் உள்ள ஞானத்தை உன்னிடத்திலுள்ள பக்தியால் பெற்று, பிறந்துஞ் செத்தும் நின்று அடரும், பிறப்பும் இறப்பும் பின் புனர்ஜன்மமும் எடுத்து மனிதரைப் பீடிக்கும் அந்தத் துயர்களெல்லாவற்றையும், தரும் பேதைமை-உண்டாக்குகின்ற மூடத்தனத்தை, தீர்ந்தொழிந்தேன் - விட்டுவிட்டேன். இந்த ஸம்ஸரிக்கும் பேதைமைக்கும் பயத்துக்குமல்ல நான் இப்போது வருத்தப்படுவது—பின் எதற்கென்றால், அதை அடுத்த பாசுரத்தில் விவரிக்கிறார்.

8-ம் பாசுரம்.

கண்டு கொண்டென் கைக ளார
நின்றிருப் பாதங்கள்மேல்
வெண்டிசையு முள்ள பூக்கொண்
டேத்தி யுகந்துகந்து
தொண்ட ரோங்கள் பாடி யாடச்
சூழ்கடல் ஞாலத்துள்ளே
வண்டு ழாயின் கண்ணி வேந்தே
வந்திட கில்லாயே.

பொழிப்புரை:-இப்போது உன்னை நான் விளிப்பது யாதற்கெனில் ; உன்னை என் கண்களாலே கண்டுகொண்டு என் கைகளார நின் திருப்பாதங்கள்மேல் எட்டுத் திக்குகளிலுமுள்ள பூக்களைக்கொண்டு அருச்சித்துத் துதிசெய்து மனம் உவந்து உவந்து ஸ்ரீ வைணவர்களோடே நின்று பாடி யாடவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கூப்பிடுகிறேன். நறுந்துழாயின் கண்ணி வேந்தே! நானிப்படிப் படாநிற்க வந்தருளுகிறதில்லை யென்று எம்பெருமானை இன்னாதாகிறார்"—ஆறாயிரப்படி,

9-ம் பாசுரம்.

இடகிலேனொன் றட்ட கில்லேன்
ஐம்புலன் வெல்லகில்லேன்
கடவ னாகிக் காலந் தோறும்
பூப்பறித் தேத்தகில்லேன்
மடவன் னெஞ்சம் காதல் கூர
வல்வினையே னயர்ப்பாய்த்
தடவு கின்றே னெங்குக் காண்பன்
சக்கரத் தண்ணலையே

உரை:—முதலடியிலுள்ள "ஒன்று" என்பதைக் காகாக்ஷி நியாயத்தால் இரண்டு பக்கமும் அந்வயிக்கவும். ஒன்றை - ஒருபிடி யன்னத்தை, இடகிலேன் - பசித்தவர்களுக்குக் கொடுக்கவில்லை, ஒன்றை - ஒரு பாத்திர ஜலத்தை, அட்டகில்லேன் - தாகமுள்ளவர்களுக்கு வார்த்ததில்லை, (பகவத் கீதையில் ஓதியுள்ள கர்மயோகத்தின் ஓர் அங்கமாகிய தானத்தை யான் இயற்றவில்லை) ஐம்புலன்கள் வெல்லகில்லேன் - ஐம்புலன்களை யடக்கித் தவம் இயற்றுவதான கீதையில் சொன்ன இரண்டாவது யோகமான ஞானயோகத்தைச் செய்யவில்லை. காலந்தோறும் - சாஸ்திரங்களில் கூறியபடி அந்தந்தக் காலங்களில், கடவன் ஆகி-எந்த எந்தக் கடமையைப் பூண்டு செய்யவேணுமோ அவ்வண்ணம், பூப்பறித்து ஏத்தகில்லேன்-பூக்களைக் கொண்டு அருச்சித்துக் கீதையில் சொன்ன மூன்றாவது உபாயமான பக்தியோகத்தை இயற்றவில்லை. (இவைகளெல்லாம் பகவானை யடைய உபாயம்; இவைகளின் உதவியில்லாமல்) மட - மடப்பமுடையதாய்ப் பகவத் விஷயத்தில் வீழும் ஸ்பாவமுள்ள, வன்னெஞ்சம் - வலிய என்னெஞ்சை (பகவான் தள்ளினாலும் அவனை விட்டு விலக்கமுடியாதபடி முரண்பிடித்த என் நெஞ்சை) காதல் கூர - ஆசை தூண்ட, அயர்ப்பாய் - மோஹம் பிடித்தவனாய், தடவுகின்றேன் - வழியறியாமல் அலமந்து தடவுகின்றேன். வல் வினையேன் - மஹா பாபியாகிய யான், சக்கரத்து அண்ணலை - சக்கிராயுதத்தைத் தரித்த பராக்கிரமசாலியை ; எங்குக் காண்பன்-எப்படிக் காணப்போகிறேன். காணமாட்டேன் என்று தாத்பரியம்.

10-ம் பாசுரம்.

சக்கரத் தண்ணலே யென்று தாழ்ந்து
கண்ணீர் ததும்ப
பக்க நோக்கி நின்ற லர்ந்தேன்
பாவியேன் காண்கின்றிலேன்
மிக்க ஞான மூர்த்தியாய
வேத விளக்கினையென்
தக்க ஞானக் கண்க ளாலே
கண்டு தழுவுவனே.



பொழிப்புரை:—சக்கரத்தண்ணலே யென்று உன் பக்கம் என்மனம் வீழ்ந்துகிடக்கக் கண்ணீர் ததும்ப நாலுபக்கமும் நோக்கிக் காண அலமந்தேன்; யானாகிய பாவி காணவில்லை—ஞானஸ்வரூபனாயும் வேதங்களால் அறியக்கூடியவனுமான உன்னைநான் எப்படிக் காணக்கூடும்? (அவனைக் காண்பதற்கு என்ன உபகரணத்தைக் கொண்டு முயற்சி செய்தீரென்றால்) எனக்குத் தக்கபடியுள்ள ஞானக் கண்களாலே கண்டு ஆசையின் மிகுதியால் காண எத்தனிப்பன். பயன்படுவதில்லை, யான் பிழைக்குமாறு என்னே, என்று துக்கப்படுகிறார்.

11-ம் பாசுரம்.

தழுவிநின்றகாதறன்னாற் றாமரைக் கண்ணன்றன்னைக்
குழுவுமாடத்தென் குருகூர்மாறன்சடகோபன்சொல்
வழுவில்லாத வொண்டமிழ்களா யிரத்துளிப் பத்துந்
தழுவப் பாடியாட வல்லார் வைகுந்த மேறுவரே.

பதவுரை:—தழுவிநின்ற - என்னுயிர் போகாதபடி அதற்கு ஏற்ற ஒரு ஊன்றுகோலாயும் சார்பாயும் துணைநின்ற, காதல்தன்னால் - பகவானிடத்தில் வேட்கையினால், தாமரைக் கண்ணன் தன்னை - தாமரை மலர்போன்ற கண்களையுடைய பகவானை, அழகான மாடங்கள் நெருங்கிய குருகூர்ச் சடகோபன், சொல் வழுவில்லாத-பகவானுடைய குணங்களை வர்ணிப்பதில் குற்றம் குறைவு இல்லாத சொற்களால் அமைக்கப்பெற்ற, ஆயிரத்துள் இவைகள் பத்தையும், மனப் பூர்வமாகப் பண்பாடி நர்த்தனம் செய்கிறவர் வைகுந்தமேறுவர்.

குறிப்பு:—ஸர்வேச்வரனை, விசதமாகப் பிராகாசிப்பிக்கின்ற அநேக கல்யாண குணங்களையுடைய எம்பெருமானைக் கண்ணால்கண்டு அநுபவிக்காததினாலே தன்னிழவை முன்னிட்டு ஆழ்வார் இப்பத்தில் மனஸ்தாபப்படுகின்றார். இப்பெரியார் மனோபாவத்தோடு கூட இதைப் பாடி யநுபவிக்கின்றவர்களுக்கு வைகுந்தம் கிடைப்பதில் தடையில்லை என்று இந்தப் பலசுருதி பாசுரத்தில் கூறுகிறார். இத்தசகமும் இதற்கு முன் தசகமும் அவதானமில்லாமல் படிப்பவர்க்கு நன்கு பொருள் புலப்படுவதரிது.

# தேவகி

[168-வது பக்கத் தொடர்ச்சி]

அன்றுமுதல் என் மாணவி இராணியம்மாளுக்கு நான் பாடம் ஓதி வந்தேன். அம் மாளிகையிலுள்ள எல்லோரும் இந்திராணியை இப்படியழைக்கின்றனர் ஆதலால் நானும் அவ்வாறே அழைக்கின்றேன். குலத்திற்குரிய தன்மையும் புத்திசாலித்தனமும் போகுமா? என் மாணவி மிகவிரைவில் கற்றுவந்தாள். சாப்பிடும் வேளைதவிர மற்ற வேளைகளில் என்னுடனேயே யிருப்பாள். மாலையில் இருவரும் தோட்டம் சென்று பூக்கொய்வோம். கொய்தமலரைத் தொடுத்து நான் இராணியம்மாளுக்குச் சூட்டுவேன். நாளாக நாளாக என் மாணவி என் உள்ளத்தை முற்றிலுங் கவர்ந்துவிட்டாள். நானும் அவளுக்குத் தாயே ஆனேன். இராணியின் நாமமே எனக்கு மந்திரமாயிற்று. வையமெங்கும் அவள் திருவுருவத்தையேகண்டேன். அல்லும் பகலும் நாங்கள் இருவேமும் இணைபிரியாதிருந்தோம். இன்னபடி பதினைந்து நாட்கள் கடந்தன. வெளியூர் சென்றிருந்த இவ்வில்லுடை வள்ளலார் திரும்பவில்லை. அம்மையார் கவன்றனர். மாளிகையில் உள்ள எல்லோரும் அன்னையினும் அதிகக் கவலையுறலானார்கள். மூன்றாவது வாரமும் கழிந்தது. வள்ளலார் வந்திலர்.

நான்காவதுவாரம் வெள்ளிக்கிழமையன்று மாளிகையில் கௌரிபூசை நடந்தது. மாளிகையை அலங்கரிப்பதும், பூசைக்குரிய காரியங்கள் செய்வதுமாய்ப் பணியாளர் யாவரும் பொருந்தினமையான் எங்கும் அரவமும்நடமாட்டமும் அதிகமாயின. கௌரிபூசை விழாவினால் மனங் கவரப்பெற்ற இராணியம்மாள் அன்று என்பக்கல் வரவேயில்லை. பகல் இரண்டு மணிக்குப்பூசைமுடிந்தது. அன்று தனிமையில் இருந்ததால் என் பழைய நினைவெல்லாம் என்னைச் சூழலாயின. மாமனை நினைந்தழுதேன். மாமியின் கொடுமையும் அவள் மக்கள் செய்த சிறுமையும் என் மனமெழ நடுங்கினேன். என் தோழியர்களை நினைத்து அவர்களைப் பார்க்க அவாவினேன். மாமன் மனையினில் பெற்றோரினும் பரிந்தென்னைப் பாராட்டிய தையம்மாள் நினைவே என்னை மிக வருத்தியது. அவளை எப்பொழுது காணப்பெறுவது என்று ஏங்கினேன். ஏங்கிய நான் அவளுக்கு ஒரு கடிதத்தை யெழுதினேன்—

"அன்பி னிருக்கையே,

நான் வந்துள இப் புதுமனை என் துன்பமெலாம் அகற்றிவைக்க இனிதுவாழ்கின்றேன். இம்மனையுறை பெருந்தேவி, ஜமீன்தாரின் அன்னையார், எனக்கும் அன்னையானார். இங்குளார் யாவரும் நல்லவர். என் மாணவியும் நல்லள். சித்தூர்ப் பதியினில் நன்மையின் நலத்தையே காணப்பெறுகின்றேன். உன்னுடை நல்லெண்ணம் எனக்குக் காப்பா யிருக்குமளவும் தீயவை என்னைச்சார்தல் இயலுமோ. உலகத்தை உய்விக்க நல்லோர் நினைவுஒன்று போதாதோ. உன்னுடன் வாழ்வதற்கில்லாக் குறையல்லால் வேறொரு குறையுமில்லை. கடவுளினருளிப்பின் அதுவும் எளியதே.என் துயர்துடைத்த அவனுக்குக் இக்குறையைத்தீர்த்தொழித்தல் அருமையன்று. என் தோழியர்க்கு என்நினைவைச் சொல்லுவாய். என் மாமியும் மக்களும் சுகமென்றே நினைக்கின்றேன். என்வல்வினையின் செயலே இதுவாக, புரிகருவியாய் அமைந்த அவர்மீது நான் குறை கூறுவானேன். உன்னைக் காண்பதற்கவாவும்,

தேவகி.

இக்கடிதத்தை எழுதி முடித்ததும் இம்மனையின் கோபுரத்திலிருக்கும் கடிகாரம் நான்குமணி யடித்தது. அன்று விண்ணிடைப்புரண்டமேகம் வெயிலின் கொடுமையைச் சிறிது தணித்தமையால் மாலைநேரம்

மனதைக்கவரும் தன்மையதாயிருந்தது. எனவே நானே இன்று வெளிச்சென்று தபால்நிலயத்தில் கடிதத்தைச் சேர்ப்பித்துவிட்டு வரலாம் என்று நினைத்து அம்மாளிடம் போய் விடைபெற்றேன். அவ்வேளை ஓடிவந்தெனது இருகால்களையும் கட்டிக்கொண்டு தன்னையும் அழைத்தேகுமாறு என்னை வேண்டிய என் மாணவியை இருகையாலும் வாரியெடுத்து மார்போடணைத்து வீட்டிலேயே யிருக்குமாறு சொல்ல அத்திருமுகச்செல்வியும் என்சொல் ஏற்றுக்கொண்டாள். நான் அழகிய அம்மாளிகைத் தோட்டத்தின் வழியூடே நடந்து வீதியை எய்தினேன். சாலையினிருமருங்கும் ஆலமரங்கள் அடர்ந்திருந்தன. சிறிது தூரம் அச்சாலையில் நடந்துபின் தபால்நிலயமிருக்கும்பாதையை அடைந்தேன். தபால்நிலயத்தில் கடிதத்தைச் சேர்த்துவிட்டு வெளிச்சம் இன்னு மிருந்ததால் மனமிழுத்தவழியேநடந்து ஒருபெரியசாலையையெய்தி அங்கோர் காலங்கண்ட ஆலமரத்தின் அடியினில் அமர்ந்தேன். இதுவரை நான் அறிந்திராத உள்ளக்களிப்பும் அமைதியும் என்னைத்தழுவின. எனதிடக்கண் இடைவிடாமல் துடித்தது. இன்று நானெய்தப்பெற்றஉள்ள நிலையை என் மாமனது முத்தமும் முன் விளைவித்ததில்லை. இறந்துபட்ட என் மாமன் மீண்டும் உயிர் பெற்றுவாரார். என் சிற்றப்பன் வருவதற்கோ குறைந்தது ஓராண்டாகலாம். துடிக்கின்ற இடக்கண் எந்நலம் என்பாற் புரியப்போகின்றது. இன்னவாறு எண்ணமிட்டவளாய் அந்தியின் வருகையையும் கவனிக்காமல் அங்கேயே தங்கிவிட்டேன்.

இளங்காற்று கவரிவீச, கிளையுறைபுட்களெல்லாம் மங்களமொழிமுழங்க, வண்டினங்கள் இசையெடுக்க அந்தியும் வந்துற்றாள். இருந்தாற்போலிருந்து எனக்கெதிர்த்திசைச் சாலையினின்று புழுதி மேக மெனக் கிளம்பியது. கிளம்பிய புழுதி அதிகமாகவே அச்சத்துடன் எழுந்துநின்று அப்படலம்கிளம்பிய திசையை நோக்கினேன். சிறிதுநேரத்திற்கெல்லாம் காற்றினும் கடுகிப்பாயும் பரிமாவின் காலடி அரவம் கேட்டது. அரவம் நெருங்கி நெருங்கி, குதிரையும் அதனை உகைக்கும் வீரனும் கண்ணிற்பட, வருபவனை நோக்கி நின்றேன். குதிரை என்னருகு வருதலும், அதன்மீதிருந்த சுந்திரன் என்னைச்சிறிது உற்றுநோக்கிப் பின் குதிரையை முடுக்கினான். உடனே தாவிப்பாய்ந்த குதிரையின் காலினில் கல்லிடறி வீரனும் தரையில் வீழ்ந்தான்.

இந்நிகழ்ச்சி என்னைக் கலக்கிவிட்டது. செய்வதியாதென்று தெரியவில்லை. வீரனருகில் சென்றேன். அவன் தலையிலிருந்து குருதி அருவியெனப் பாய்ந்தது. எழுந்திருக்க முயன்றவீரன் அது இயலாமல் என்னை நோக்கினான். அவன் நெடுந்தோளும் திருமுகமும் என்னை யாட்கொண்டன. என்னைப்பரிந்து நோக்கும் அவ் வீரனோ வாய்திறக்கவில்லை. நாணமோ என்வாய்க்குப் பூட்டாய் அமைந்தது. வீரனுற்ற நிலையும், பாயும் குருதியும் என் நாணத்தினைச் சிறிதுபுறங்காண, 'ஐய, நான் புரிவதற்கொன்றுளதாயின் பணித்தருள்வீர்." என்னலும் அப்பெருமகன் என்னையும் தன் குதிரையையும் பார்த்தானேயன்றி அவன் திருவாய் திறக்கவில்லை. ஓடுகின்ற இரத்தத்தைத் துடைக்க விழைந்தேன். அது புரிவதற்குப் போதிய துணிவோ எழவில்லை.

என்வினு அவன் செவிதான் சாரவில்லையோ என எண்ணி மீண்டும், "ஐய, நான் சொல்லியது நுமக்குக் கேட்கவில்லையோ. அளியள் யான் பணியேற்க நிற்கின்றேன்" என்றுகூற அவ்வீரன், "நங்காய், நானுன்னைத் தொடுவதற் கொவ்வுவாயோ நீ" என்று கேட்டான். நாணத்தாற் கண்புதைத்து மறுபுறம் திரும்பினேன். 'நாணினையோ பெண்ணே. துவராடும் நின் னிதழொளித்த நிலவாடும் நகையதனைக்கண்டுவிட்டேன். நன்று நங்காய் நாணுதற்குரிய அமயம் இதுவன்று. பிறகு நாணலாம். என்னருகு வா" என்றழைக்க நெருங்கினேன். கைக்குட்டை யொன்றை எடுத்துக்கொடுத்தான். அருகிருந்தவொரு ஓடையில் அதை நனைத்து வந்து அவன் தலையிலிருந்து பெருகிய குருதியைத் துடைத்து, என் சேலையின் முன்தானையைக் கிழித்துக் காயத்தைக் கட்டினேன். பின் என்னை நோக்கி 'அப்புரவியை இங்குக் கொண்டு வருவாயோ" வென்றான். ஓங்கி வளர்ந்த அக்கலினமாவி னருகுசெல்லப் பயந்து நின்றேன். உடனே, "கோழைப்பெண்ணே, இங்குவா" என்று கூறி, என்னைப் பிடித்துக்கொண்டு குதிரையின் அருகு தானே சென்றான். சென்றவன் அதன்மீது சாய்ந்துகொண்டு "எனக்கிவ்வுதவிசெய்த நீ, யார், வதிவதும் எவ்வூர்" என்று கேட்டான்.

"நானோர் ஏழை ஐயா' என்றேன்.

"பெண்ணே, யார்தான் இவ்வுலகில் ஏழையல்லர்? விழைவினுற்றேவரும் எளியர்தாம். புரந்தரனும் பார்வேந்தர் புறவாயில் நின்றிரந்தான். அஃதிருக்கட்டும்; நின்பதி யாதெனத் தெரிய விழைகின்றேன்."

"என்னுடைய ஊரென்று சொல்லற்குரிய வொன்று எனக்கில்லையாதலால், ஐயா, மயங்குகின்றேன். நான்வளர்ந்தது குடந்தையில்; இப்பொழுது இச் சித்தூரி லிருக்கின்றேன்."

"நின்னுரையில் நங்காய் குறையொன்று பயில்கின்றது. அணங்கனையாய் இவ்வூர் வந்துற்றதும் எதற்கு"

"ஐயனே, வயிறு ஒன்று இருப்பதால் வாராது என்செய்வது. பசியாத மருந்தளிப்போர் காணப்பெறுமல் நான் இங்குவந்தேன். கடவுளும் என்வயின் அருள்சுரந்தான்.

"கடவுளும் அவனருளும் ஒருபுற மிருக்கட்டும். இவ்வூரில் யாருடன் இருக்கின்றாய். உறவினர் உளரோ, பெண்ணே."

"உறவினர் ஒருவருமில்லை. இவ்வூருறை ஜமீன்தார் இல்லத்தில் அவர்பயந்த புதல்விக்கு ஓதுவிக்கும் தொழிலேற்று வாழ்கின்றேன். அப்பெருமகன் நெடிது வாழ்க.'

"வாழ்த்தி நீ யவரைப் பின்னர் வாழவைக்கலாம். நின் வாழ்த்தொலி யவர்செவி சாரின் மகிழாதுபோகார். நிற்க, நான் கேட்பதற்கு நின் சொற்சதுரம் காட்டாமல் விடையளிப்பாய். அவரை உனக்குத் தெரியுமா."

"நான் இப்பதி வந்து மாதம் ஒன்றாகப்போகின்றது. இன்றுவரை நானவரைக் காணும் பாக்கியம் பெற்றதில்லை. அவர் வெளியூர்சென்றிருப்பதாக அறிகின்றேன். அவ ரன்னையும் வாடுகின்றார்."

"நன்மகன் அவன்தன் அன்னையின் சோர்வைத் தீர்த்து வைப்பான். நீ ஈண்டுத் தனிமையில் இருக்க நேர்ந்ததேனோ."



"தபால்நிலயத்திற்கு வந்தேன். மாலையின் வனப்பு என்னைக் கவர்ந்ததால் பொழுதுசென்றதையும் கவனியாமல் தங்கிவிட்டேன். அப்படிச் செய்ததும் நல்லதே யாயிற்று."

"நீ எய்திய நன்மை யாதென் றறியேனாயினும், துணையின்றி நீ வெளியேகப்பார்த்திருந்த ஜமீன் பணியாளர் வேலை செய்முறை வியப்பையே தருகின்றது.',

"வியப்பதற்கொன்றுமில்லை. ஆட்களிருக்கின்றனர். அன்புடன் என் ஏவலையும் ஏற்கின்றனர். வந்த நாள் தொட்டு நான் வெளிச்சென்றதில்லை யாதலால் இன்று அன்னையின் அனுமதி பெற்றுத் தனி வந்தேன். இல்லையேல் இவ்வேளை நினக்கு இவ்வுதவி செய்யும் பாக்கியம் எனக்கு எங்ஙனம் கிடைத்திருக்கும். இன்னதில் கடவுளின் திருவுளத்தை நான்காண்கின்றேன். ......" என்று நான் முடிக்குமுன் என்முன்னிருந்த வீரன் குதிரையின்மீது ஏறிக்கொண்டான். பின்னர் என்னை யொருமுறை நோக்கினனாய் 'நல்லது நங்காய், என் வந்தனம் ஏற்பாய்' என்று கூறிக் குதிரையை உகைத்துச்சென்றான்.

குதிரையும், வீரனும் கடிதின் என் கண்மறைய நான் சிறிதுநேரம் அவ்விடமே திகைத்து நின்றுவிட்டேன். என் உள்ளும் புறமும் அவ்வீரனையும் குதிரையையுமே கண்டேன். இந்நிலையில் வான மிடிக்க மழைத்துளியும் தூவலாயிற்று. உடனே அகன்றிருந்த என் உணர்வு மீண்டுவர மாளிகைநோக்கி விரைந்தேன்.

---

# கலித்தொகை

[172-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக் கலி 7.

தலைவன் பிரியப்போவதைக் குறிப்பால் அறிந்த தோழி அவனையடைந்து, பொருளினது நிலையாமையையும், தலைவியோடு இல்லறம் நடத்துவதின் பெருமையையும் எடுத்துக் கூறி அவன் போக்கை நிறுத்த முயன்றதைக் கூறுவது இச்செய்யுள்.

நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலி
னுறலூறு கமழ்கடா அத் தொல்கிய வெழில்வேழம்
வறனுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ்சேர
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின்மற் றைஇய:

வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோ
லேழுந்தம் பயன்கெட விடைநின்ற நரம்பறூஉம்
யாழினுந் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ !

மரீஇத்தான் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறுந் [லாது
திருவினுந் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ !

புரைதவப் பயனோக்கார் தம்மாக்க முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்
[வௌவு
மரைசினுந் நிலையில்லாப் பொருளையு நச்சுபவோ!

எனவாங்கு,

நச்சல் கூடாது பெரும விச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழையக் கூடி
னின்னுறல் வியன்மார்ப வதுமனும் பொருளே.

(தரவு)

நடுவு இகந்து ஒரீஇ - நடுவுநிலையைக்கைவிட்டு, நயன் இல்லான் - அருளில்லாத அமைச்சன், வினைவாங்க-தன் மனத்திற் கிடந்த விஷயத்தை வெளிப்படுத்த, கொடிது ஓர்த்த - (அதைக்) கேட்டுக் கொடிய செயலைச் செய்ய நினைத்த, மன்னவன் கோல்போல - அரசனது கொடுங்கோல் வருத்துமாறுபோல், ஞாயிறு கடுகுபு கதிர்மூட்டி- சூரியன் கடுகிக் கிரணங்களைச்செலுத்தி, காய்சினம் தெறுதலின் - மிக்க கோபத்தால் சுடுதலால், உறல் - (முன்பு வண்டுகள்) பொருந்துதலையுடையதாய், ஊறு கமழ் கடாத்து - சுரக்கின்ற மணம் வீசும் மதநீரை யுடையதாயிருந்து, ஒல்கிய எழில் வேழம் - (இப்பொழுது) கெட்ட அழகையுடையதாயிருக்கின்ற யானை, வறன் உழு நாஞ்சில்போல் - காய்ந்த நிலத்தை உழுகின்ற கலப்பைகள்போல, மருப்பு ஊன்றி நிலம்சேர-கொம்புகளைஊன்றி நிலத்தில் (சோர்ந்து) கிடக்க, விறல்மலை வெம்பிய-பலம் பொருந்திய மலைகள் கொதித்தலைப் பெற்ற, போக்கரு வெஞ்சுரம்-போதற்கு அருமையாகிய கொடிய காட்டைக் கடந்து, சொல்லாது இறப்ப துணிந்தனிர்க்கு-எங்களுக்குக் கூறாமல் போகத் துணிந்த நுமக்கு, ஒரு பொருள் சொல்லுவது உடையேன்-ஒரு விஷயத்தைச் சொல்லுந் தன்மையை உடையேன், ஐய கேண்மின் - பெரியீர் அதனைக்கேட்பீராக.

(தாழிசை)

வீழ்நர்க்கு - விரும்புவார்க்கு, இறைச்சியாய் - விருப்பமாய், விரல் கவர்பு இசைக்கும்-விரலாலே தடவப்பட்டு ஒலிக்கும், கோல் எழும் தம் பயன்கெட - நரம்பு எழும் தம் (இன்பமாகிய) பயன்கெடும்படி, இடைநின்ற நரம்பு அறூஉம் - நடுவிலே நின்ற நரம்பு அற்றுப்போகும், யாழினும் - யாழைக்காட்டிலும், நிலைஇல்லா பொருளை-நிலைபேறில்லாத பொருளை, நச்சுபவோ - (அறிவுடையோர்) விரும்புவார்களோ !

மரீஇ தான் கொண்டாரை - கூடித் தான் விரும்பினவர்களை, கொண்டகால் போலாது - (தான் மனத்தால்) கொண்ட காலத்தில் அவர்கள் இருந்த நிலைமைபோல் அல்லாமல், பிரியுங்கால் - அவர்களை விட்டுப் பிரியும் பொழுது, பிறர் எள்ள பீடு இன்றி - பிறர் இகழும்படி. அவர்களுக்கு ஒரு விதப் பெருமையும் இல்லாமல், புறம் மாறும் திருவினும் - (அவர்களை விட்டு) அயலே நீங்கும் லக்ஷ்மியைக்காட்டிலும், நிலை இல்லா பொருளை நச்சுபவோ-நிலைபேறில்லாத பொருளை (அறிவுடையோர்) விரும்புவார்களோ !

லக்ஷ்மி முதலில் ஒருவரை அடையும் பொழுது அவர் நிலைமை சிறப்பாக இருக்கின்றது. ஆனால் அவரை அவள் விட்டுப் பிரியும்பொழுது அந்நிலைமை முன்னைய நிலையினும் மிகவும் தாழ்வானதாகின்றது. அவளைக்காட்டிலும் நிலைஇல்லாத செல்வத்தை அறிவுடையோர் விரும்புவார்களோ! விரும்பார்.

புரைதவ - உயர்ச்சி மிகும்படி, பயன் நோக்கார் - (தாம்பெறும்) பயனைப் பாராமல், தம் ஆக்கம் முயல்

வாரை - (அரசராகிய) தமது ஆக்கத்தை முயல்கின்ற அமைச்சரை, வரை இன்றி - அளவின்றி, செறும்பொழுதில் - கோபிக்கும் பொழுது, கண்ணோடாது உயிர் வௌவும் அரசினும் - கருணை இன்றி (பழமையைக் கவனியாது பொருள் முதலியனவன்றி) உயிரையும் தொள்ளும் அரசரைக்காட்டிலும், நிலேஇல்லா பொருளே நச்சுபவோ -நிலேபேறில்லாத பொருளே அறிவுடையோர் விரும்புவார்களோ ?

தாம் பெறும் பயனேக் கருதாது அரசர் ஆக்கத்தையே கருதும் அமைச்சர் எனக் கொள்க.

(தனிச் சொல்)

என - என்று யான் சொல்ல. ஆங்கு - அசை.

(சுரிதகம்)

பெரும - தலேவனே, நச்சல் கூடாது - பொருள் விரும்புதல் நினக்குப் பொருந்தாது ஆதலால், இ செலவு ஒழிதல் வேண்டுவல்—நீ இச்செலவை ஒழித்தலே யான்விரும்புகின்றேன், சூழில் - ஆராயின், பழியின்று-பழியில்லாமல், மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி - அரசன் காக்க வருகின்ற விருந்தினரைப் பாதுகாத்து, தன் நகர்விழைய கூடின்-தன் மனேவி விரும்பும்படி அவளுடன் கூடியிருப்பின், இன் உறல்-இனியமுயக்கத்தைப் பெறுதலேஉடைய, வியன் மார்ப-அகற்சியையுடைய மார்பனே, அது மனும் பொருளே - அதுவே நிலேபெறும் பொருளாம்.

நகர் - ஆகு பெயர்.

# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்—சூதுபோர்ச் சருக்கம்

[126-வது பக்கத் தொடர்ச்சி]

ஐவரும் தேரேறியபின்னர்த் தானேயும் நடக்கலுற்றது. அத னணியின் முன்வகுப்பில் யானேகள் நின்றன.

மைத்தி றத்தினின் றதிர்வன
முதிர்வன வரைத்திறத் தினுமோங்கு
மெய்த்தி றத்தன வெழுதிறத்
தினுமிக விடுவன மததாரை
யெத்தி றத்தினும் பொருதொழில்
புரிவன வேழுறப் புறத்தாழ்ந்த
முத்தி றத்தன வெண்ணலப்
பிறப்பின மூரிவெங் களியானே

[மேகக் கூட்டம்போல் பேரிடிமுழக்க முடையனவாகியும், முதிர்ந்த மலேகளின் கூட்டத்தைவிட ஓங்கிவளர்ந்த உடலேயுடையனவாகியும், ஏழு வகையில் மதநீர் பொழிவனவாயுகிம், பலவகையில் போர்த்தொழில் புரிவனவாகியும், ஏழு அவயவங்கள் நிலத்திற் பொருந்த இருப்பனவாகியும், மூன்றுவகைப்பட்ட நன்கு எண்ணப்பட்ட பிறப்பினே யுடையவையாகியும் இருந்தன, வலிமை பொருந்தியவெம்மையை யுடைய மதங்கொண்ட யானேகள்]

இந்தியநாட்டரசர்களுக்கு யானேப்படைகள் சிறந்தவை. அவைகளே வைத்து வளர்ப்பதே அரசர்களுக்கோர் பெருமை. அவைகள் முன்னுளில் எவ்வளவு மதிக்கப்பெற்றிருந்தன வென்பது, "யானே செத்தாலும் ஆயிரம்பொன் பெறும்' என்னும் பழமொழியால் விளங்கும். மேலும் புதிய படைக்கலங்கள் கண்டுபிடிக்கப்படாத அந்த நாட்களில், போர் செய்யவும், மதிற் சுவர்களேத் தாக்கவும் யானேகளே நன்குபழக்கியிருந்தார்களாதலால், அவைகள் பல்லாற்ருனும் பாராட்டப்பட்டுக் கவிகளால் சிறப்பித்துப் பாடப்பட்டன.

அவைகளின் இலக்கணங்களிற் சில இச்செய்யுளிற் காணலாம். உயர்ந்தோங்கிக் கருநிறமுடையனவாய், மதமழை பொழிந்து ஓங்கரித்தலால் இவை மேகத்துடனெப்பாயின. இருகண், இருகாது, துதிக்கையின் துளே, மூத்திரப் புரிடை, இவைகளால் மதம் பொழிதலால் எழுதிறத்தினும் விடுவன தாரை. இவைகளின் போர்செய்யும் திறமை வெளிப்படை. கால்களானும், துதிக்கையானும், மத்தகத்தானும், தந்தங்களாலும் பகைவரை அழிக்கும் வல்லமை வாய்ந்தவை. இற்றைக்கு 2260 ஆண்டுகளுக்குமுன், மேனுட்டு வெள்ளேயரில் முதன்முதலாக இந்தியாவுக்கு வந்த பெரிய அலெக்ஸாண்டர் என்பவன் இந்திய அரசனுன போரஸ் (புரூரவஸ் என்பது அவனுண்மைப்பெயரா யிருக்கலாம்) என்பவனேடு கடும்போர் புரிந்த நாளில் இந்தியர்கள் தம் யானேப்படைகளேக் கொண்டு பயமுறுத்தி அவனேத் துரத்திவிடலாமென்றெண்ணினர்கள். இதற்குமுன் இவ்வகைப்பட்ட படையை அவன் கண்டறியானேனும், தறுகணுண்மைவாய்ந்தவரும், ஒருவராலும் வெல்லப்படாதவருமான அவனது படை வீரர்கள் அவைகளேக் கண்டு அஞ்சாமல் வேலும் வில்லுங்கொண்டு தாக்கவே அவ்வியானேகள் மிக வெகுண்டவைகளாகி இந்தியர்மீதே திரும்பி இந்தியப்படைக்கு அழிவை விளேவித்தன. நான்கு கால்களும், துதிக்கையும், வாலும், கன்றுகளேப் படைப்பதற்குரிய உறுப்பும் நிலந்தாழலால் ஏழுறப்புறத் தாழ்ந்த எனப்பட்டன. மலேயிற் பிறப்பனவும், ஆற்றுநீர்ப்புறம் பிறப்பனவும், காட்டிற் பிறப்பனவுமாய் யானேகள் முத்திறத்தன வாயின.

வன்ற போதன ரினுமிகு பொறையன
வலனுயர் வனவெண்கோ
வென்ற போதகத் தானேயின் பெருமையை
யெங்ஙனம் புகல்கிற்பா
நின்ற போதுடன் முகிலிடை மறைந்தது
நிரைநிரை நெறிப்பட்டுச்
சென்ற போதுவெம் படைக்கடற்
செய்ததோர் சேதுபந் தனம்போலும்.

[வலிய தவத்தையுடைய முனிவரைவிட மிகுந்த பொறுமையுடையவைகளாயும், உயர்ந்த வல்லமை பொருந்தியவைகளாயும், வெள்ளேயான அரசயானேயான ஐராவதத்திற்கு ஒப்பிடக் கூடியவைகளாயும் இருந்த யானேப் படையின் பெருமையை எவ்வாறு சொல்லுவேன்; அவை நிற்கும்போது அவைகளின் உடல் மேகங்களுடன் மறைந்தது; வரிசை வரிசையாக நேர்பட்டுச் சென்றபோது வெவ்விய படையாகிய கடலிற் கட்டப்பட்ட ஓர் அணேபோல் தோன்றின.]

முதற் செய்யுளேவிட இச்செய்யுளிற் சற்றே பொருளமைந்துள்ளது. சினமுடைமை தவசிகளுக்கு இழுக்கைத் தரும். சினந்து சாபமிடலால் ஈட்டிய தவத்தினளவு குறையுமென அஞ்சி, முனிவரர் முனிவாற்றுவர். பிறரிழைக்குந் தீங்குகளுக்கும், குறும்புகளுக்கும் உடனுக்குடனே கைப்பலன் தந்து ஒறுக்கவல்ல வன்மை வாய்ந்தன வேனும் யானேகள் ஒருவரையும் வெகுண்டு அன்று கொல்வதில்லேயென்பர். ஆதலால் வேழங்கள் முனிவருக்குப் பொறுமையில் ஒப்புமை கொண்டன. 'எண்கோ என்ற' எனப்பிரித்து நன்கு மதிக்கத்தகுந்த மலேக்கு ஒப்பான யானேகள் என்றும் பொருள் கூறலாம். நின்றபோது உடல் முகிலிடை மறைந்த தென்பது உயர்வுநவிற்சி யணியாம். படையாகிய கடலினிடையே கருநிறமுடைய யானேகள் வரிசையாய் ஒழுங்குபட நின்றது அக்கடலே அடைத்தற்கெனக் கட்டப்பட்ட அணேபோ லிருந்ததென்றூர். சேதுவி னெய்தி வரிசிலே யிராமன் செய்த பந்தனம் உலகறிந்ததோர் விஷயம். தசரதன் மிதிலேக்கெழுந்து செல்லுங்கால் அவனது படையிலுள்ள யானேகளே வருணிக்கும்போது கம்பர் அவைகளுக்கும், ஆற்றுக்கும் சிலேடையா யொருகவி கூறியிருப்பதும் இங்கு உணரத்தக்கது.

இதற்கடுத்த மூன்று பாடல்களால் குதிரைகளும் அதற்கப்பால் தேர் முதலியனவும் வருணிக்கப்பட்டன.

எடுத்த நீள்கொடி யாடைவா
னகல்வெளி யெங்கணு நெருங்கிக்கீழ்ப்
படுத்த வானமே வானமாய்
மறைந்தது மீதுறப் பகிரண்ட
மடுத்த பூநதி வானதிக்
கிலதென வன்புட னுபகாரங்
கொடுத்த மீனெனக் கால்பொரப்
பரந்துபோய்க் குளித்தன குளிர்தோயம்

[விரித்தெடுக்கப்பட்ட நீண்ட கொடிகளின் துணிகள் வானின் பரப்புடைய வெளியிடமெலாம் நெருங்கி அவைகளின் கீழ்க் காணப்படுகிற வானமே புவியிலுள்ளவர்க்கு வானமாய் மேலேயமைய, பகிரண்டமும் கீழிருப்பவர்களுக்கு மறைந்தது; இவ்வுலகத்துக்கங்கையானது ஆகாயகங்கைக்கு (மீன்) இல்லேயென்று அன்போடு உதவிசெய்து கொடுத்த மீன்களென்னக் காற்றினுல் அசைக்கப்பட்டுப் பரவிப்போய்க் குளிர்ந்த நீரில் தோய்ந்தன.]

படைகள் பரந்துசென்று அணிவகுப்புக்களிலெல்லாம் கொடிதூக்கி நிற்றலால், கொடிச்சீலேகள் எங்கனும்பரவின. அவை ஆகாயமளாவிப் பரந்து காற்றிலலேக்கப்பட்டு வானே மறைக்கவே, நிலத்திலுள்ளோர்க்கு அவைகளே விதானமா யமைந்தன. இனி, ஆகாய கங்கையில் மீன்கள்இல்லேயென நிலக்கங்கை தன்னிடமுள்ள மீன்களிற் சிலவற்றைக் கொடிகளிடம் கொடுக்க, அக்கொடிகள் தாமும் அவற்றினே எடுத்துச் சென்று மேனின்ற கங்கையிற் போட்டுக் குளிர்ந்த வந்நீரிற் குளித்தன என்பது, பின்னிரண்டடிகளில் அமைந்துள்ள பொருள். இவ்வணி நக்ஷத்திரங்களே விண்மீன் என்பதால் கற்பிக்கப்பட்ட தற்குறிப்பேற்றம். உயர்வுநவிற்சி யணியில் பிற்காலத்திய இந்தியக் கவிகள் கைவந்தவர். மீனேக் கொட்டி முடைநீக்கக் குளித்தனபோலும் அக்கொடிகள். ஒருவித இறும்பூதைத்தவிர இதிற் பொருத்தம் காண்பதரிது. கங்கையிற்கொட்டப்பட்ட அம்மீன்கள் ஆகாயமெங்கணும் பரந்த தெங்ஙனம்? வானம் முழுவதும் கங்கையே யாமாகிற் றற்குறிப்புப் பொருத்தமுடைத்தாம். நதியென்ப துண்டாகில் அதனில் மீன்களில்லே யெனக் காட்டவேண்டியது கவியின் முதற்றெழில். ஆகாய கங்கையில் மீன்கள் இல்லே யென்பதற்கு ஏதேனும் ஓர் காரணங்காட்டி இருப்பின், ஓதுவார் மனத்திடை மகிழ்ச்சி பிறக்கு மன்றோ?

இவ்வமயத்துக் கம்பர் கூறியிருக்கின்ற கவியொன்றைக் கவனிப்போம். எழுச்சிப்படலத்தில் யானேப் படையின்மீது ஆடிய வெண்கொடியின் வருணனே பின்வருமாறு.

நுடங்கிய துகிற்கொடி நூழைக் கைம்மலேக்
கடங்கலுழ் சேனேயைக் கடலி தாமென
விடம்பட வெங்கணு மெழுந்த வெண்முகி
லுடம்புனல் பருகிடத் தாழ்வ போன்றவே.

[துவண்டுகிடந்த வெண் துகிற்கொடிகள், மதம் பொழிகின்ற புரையமைந்த கையையுடைய யானேப்படையைக் கடலாமென்று கருதி, ஆகாயமெல்லாம் பொருந்தும்படி எங்கும் பரந்தெழுந்த வெண்மேகம் கடலின் நீரைப் பருகுவதற்குத் தாழ்வன போன்றன.]

கருநிறமுள்ள யானேப் படையின் பரப்பைப் பெரியதொரு கடலென மயங்கி, வெண்மேகம் நீர் முகந்து செல்ல இறங்கி வருவதுபோல் எங்கும் பரந்த வெண்மையான துகிற்கொடிகள் துவண்டு கீழ்நோக்கி நின்றன. வெண்மேகம் கடலிற் படிந்து நீரை முகந்து கொண்டு கார்மேகமாய் விண்ணிற் சென்று மழை பொழியுமென்பது கவி மரபு. பரந்த வெண்பட்டால் செய்யப்பட்ட கொடியாடை துவண்டு கீழ் நோக்குவதியல்பு. அது வெண்மேகம் கீழிறங்குவதை நிகர்க்கும்.

இவ்வாறு நால்வகைச் சேனேயும் ஒருங்கு திரண்டு சென்றதால் அவைகளின் கால்களினின்று கிளம்பின தூளிகள்.—

அழுந்த மேலிடு சேனேயான்
மிகவுநொந் தமருக் குரைசெய்யச்
செழுந்த ராதல மடந்தைபொன்
னுலகிடைச் செல்லுகின் றதுபோன்மே
லெழுந்த தூளிக ளிடைவிடா
தெங்கணு மெழுந்தெழுந் ததிரோடி
விழுந்த தூளியுந் தடுத்தன
நிலனுற விசும்புறும் படிநின்றே.

[நிலம்அழுந்த மேலே நெருங்கிய படைத்தொகுதியால் மிகவும் நொந்தவளாய்த் தன் குறையைத் தேவர்களுக்குத் தெரிவிக்கும்படி செழித்த நிலமடந்தை அமரருலகஞ் செல்கின்றதுபோல், மேலெழுந்த புழுதித்திரள் நெருக்கமாய் எங்கும் கிளம்பிச்சென்று எதிர்தாக்கி மேற்சென்ற தூசுகளேக் கீழே பூமியில் இறங்காமல் தடுத்து ஆகாயத்திலேயே நிற்கும்படி செய்தன.]

சேனேசெல் கதியால் கிளம்பிய புழுதிகள் கீழ்விழ முடியாமல் மேலும் மேலும் மேற்கிளம்பிக்கொண்டிருந்தன. இதைத் தற்குறிப்பேற்றமாய் இப்புலவர், நிலமடந்தை தன் வருத்தத்தை விண்ணவர்களிடம் முறையிடச் சென்றதுபோன்று இருந்தது என்றூர். தன்பாரம் பெருகும் காலங்களி லெல்லாம் பூதேவி அவ்வாறு முறையிடுவ ளென்று பல புராணக்கதைகள் கூறும்; ஆயினும் அக்காலங்களிலெல்லாம் நிலமடந்தைதன் பாரங் குறைய அமரர் வழிதேடவேண்டுமென்று முறையிடுவது வழக்கம். இச்சமயம் அவ்வாறு அவள் வேண்டினுளென்று கொள்வதற்கில்லே. தூளியும் நிலத்தின் பகுதியாதலால் தூளிகள் நெருங்கிச் சென்றது நிலமே மேலெழுந்தது போன்றது.

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[166-வது பக்கத் தொடர்ச்சி]

(b) குற்றிய லுகரத்தின் அளவும், வேறுபாடும்.

குற்றிய லுகரமாவது செய்யுளில் இசைக்குப் பொருந்தக் குறுகும் உயிரெழுத்து என்பதை யாவர் கவனியாரோ, அன்னோருக்குக் குற்றியலுகரத்தின் தன்மை விளங்காதென்பது திண்ணம். தொல்காப்பியனார் முதற் சூத்திரத்திலேயே சார்பொலி மூன்றைக் குறிப்பிட்டு, இரண்டாஞ் சூத்திரத்தில் "அவைதாம் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தமென்ற, முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன" வென்றார். ஆதலால், ஓசையில் தனித்துநின்று மொழியக் கூடிய உகரம், "நெட்டெழுத் திம்பரும், தொடர்மொழியீற்றும்" வல்லெழுத் தூர்ந்து வரினும், அது குற்றியலுகர மாகாது. எனவே "ஆதுவும்" என்று உரையாசிரியர் நன்னூல் 300-ம் சூத்திரத்தில் காட்டிய மொழியில் து முற்றிய லுகரமே யன்றி, குற்றியலுகரம் அன்று. இசையொலி மாத்திரையளவை நோக்கின் அது வெளிப்படையாம். அவ்வாறே "அழைப்பதுவே" என்பதிலும், "து"வின் உகரம் முற்றுகரமே. நச்சினார்க்கினியர், பெருமுரசு, திருமுரசு என்பன "இருமொழிக்கண் வந்த முற்றுகரம்" என்றும்; "தருக்கு, அணுக்கு என்பன வினைக்கண் வந்த முற்றுகரம்" என்றும் கூறுவார். எனவே குற்றுகரமா, முற்றுகரமா வென்றுஅறிவதற்கு, சிற்றிலக்கண விதியைச் சற்று மாற்றியுணர வேண்டுமேயன்றி, அதுவே முடிவெனச் சித்தாந்தஞ் செய்யலாகாது.

எனவே, குற்றுகரமாவது ஓசையாலும் எழுத்தாலும் இடத்தாலும் அறியக்கடவதேயன்றி, ஓசையைக் கவனியாமல் பவணந்தியின் விதியே முடிவான விதியென்று எண்ணலாகாது. வடமொழிச் சிதைவுகளான, பாசு, இங்கு, ஏது, எனபனவும் முற்றுகரமென்பது திண்ணம். இவற்றைச் செவ்வனே யுணர்த்துமாறு, நெட்டெழுத்திம்பரும், தொடர்மொழியீற்றும் வல்லாறூர்ந்த உகரம் அஃகும் என்னாது. ஆதன், இடத்தையும் பற்றுக்கோட்டையுமே யுணர்த்த "குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே" யெனத் தொல்காப்பியனார் சூத்திரம் பகர்ந்தார். ஆதலால் எழுத்தின் தன்மை மாறாவிட்டாலும், குற்றுகரத்திற்கும் முற்றுகரத்திற்கும் உள்ள பேதம் சொல்லின்நிலையையும், இசையின் போக்கையு மறிந்தே துணிதல் வேண்டுமென்பதைக் குறிப்பிடுவான், "மொழிப்படுத் திசைப்பினும்" என்னும் சூத்திரங் காட்டினார்.

குற்றியலுகரம், குற்றியலிகரம்போல் புணரியல்நிலையிடைக் குறுகலு முரித்து. இதன் விதி

"இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான"

தொல் - மொழிமரபு 4.

குற்றியலுகரம் புணர்மொழிக்கண் தன் அரைமாத்திரையிலும் குறுகலும்உண்டென்பர் தொல்காப்பியனார். இக்கருத்தையே குற்றியலுகரப் புணரியலில்,

"வல்லொற்றுத்தொடர்மொழிவல்லெழுத்துவருவழி
தொல்லை யியற்கை நிலையலு முரித்தே"

தொல் - எழு 409.

என்னும் சூத்திரத்தால் விளக்கி இருக்கின்றார். எனவே குற்றியலுகரம் (வன்மையூ ருகரம்), வருமொழி முதலில் வல்லெழுத்து வருங்காலை, குறுகாமல் அரைமாத்திரையில் நிற்பது உண்டு * குறுகுவதும் உண்டு என்றும். குறுகாததற்கு உதாரணம்:—

வைத்த மாடு மனைவியு மக்களீர்
செத்த போது செறியார் பிறிவதே
நித்த நீலக் குடியர னைநினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே

திருநீலக்குடி - திருக்குறுந்தொகை 1.

"போது செறியார்" என்பதில், "து" வின் குற்றியலுகரம் அரைமாத்திரைக்குக் குறையவில்லை. ஆயினும் வருமொழி முதலின் வல்லினம் வந்து அரைமாத்திரையிற் குறுகலைப் பின்வரும் திருவாசகச் செய்யுளிற் காணலாம்:—

விச்சுக்கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக்கானா ரெல்லாரும் வந்துன்தாள் சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாரூரெம்
பிச்சைத்தேவா வென்னான் செய்கேன் பேசாயே!

திருச்சதகம் 81.

இங்கு 'விச்சு' என்பதன் ஈற்றுக் குற்றியலுகரம் † குறுகிய ஆய்தவொலிபோல் கால் மாத்திரையும், "கேடு" என்பதன் ஈற்றுக் குற்றியலுகரம் அரைமாத்திரையும் பெற்று நிற்பது, அச்செய்யுளைப் பாடும்போது வெளிப்படையாய்த் தோன்றும். மற்றும் திருநாவுக்கரசர் பாடிய,

பட்டுடுத்துப் பவளம் போல் மேனியெல்லாம்
பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாத நோவ
விட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க்
கெவ்வூ ரெம்பெருமா னென்றே னாவி
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி
வேறோர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் படநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.

திருவலம்புரம் - திருத்தாண்டகம் 7.

என்னும் செய்யுளில் பற்பல வகை யுகரங்களுக்கும் உதாரணங்கள் காணலாம். இவற்றுள் "பட்டுடுத்து" என்பதன் ஈற்றுக் குற்றுகரம் கால்மாத்திரை யளவாய்க் குன்றி வருவதற்கும், 'படநடந்து' என்னுஞ் சீரின் இறுதியிலுள்ள உகரம் ஒரு மாத்திரை யளவுக்கு அதிகரிப்பதால் முற்றுகரமென்பதற்கும் யாதொரு சந்தேக மின்மையும், 'கொண்டணிந்து' என்பதில் 'உகரம்' இயற்கையளவான அரைமாத்திரை பெற்றிருப்பதும் இத் திருத்தாண்டக விருத்தத்தைச் சாதாரணமாய்ப் பாடும்போதும் உணரலாகும். இவ்வாறு 'உகரம்' இசையில் பற்பல வகையாய்த் திகழ்வதை வெளிப்படுத்துவதற்கே இச்செய்யுள் பாடினாரோ வென்றும் ஐயுறவேண்டியதாயிருக்கின்றது.

* வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே

திருமங்கலக்குடி—திருக்குறுந்தொகை 8.

† செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனம் பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனுந்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 2.



# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[174-வது பக்கத் தொடர்ச்சி]

ககரவர்க்கம்

602 காங்குடி யிறையுங் கிரணமுங் கழுதையும்
கைத்தலமு நஞ்சு மெனக்கழ றினரே.
603 கரிகுஞ் சரமும் பானுவு மிருந்தையும்
கறுப்புஞ் சான்று மெனக்கழ றினரே.
604 கருக் கருப்பொருளு மேடுங் கருப்பமும்.
605 கருவி யீட்டமுங் கலனு மியாழுந்
துணைக்கா ரணமுங் கவசமுந் தொடர்பும்
பல்லிய மும்படைக் கலமுந் தொகுதியுங்
காசையும் பலவினையு முகிலுங் கலணையும்.
606 கரகங் கமண்டலமு மாலாங் கட்டியும்
துளிநீருங் கங்கையுஞ் சொல்லுவர் புலவர்.
607 கரோடி பெருஞ்சுட்டுஞ் சிரமாலை யுமாம்.
608 கரிணி பிடியானையும் யானைப் பொதுவும்.
மலைமுழைஞ்சு மலையும் வழங்க லாகும்.
609 கருமை பெருமையுங் கறுப்பும் வலியும்
நஞ்சு மெனவே நவில லாகும்.
610 கரைதல் கூவுதலு மொலித்தலு மொழிதலும்
அழுதலு மெனவே யறைய லாகும்.
611 கருமான் பன்றியுங் கருமானு மாகும்.
612 கரேணு கொல்யானையும்பிடி யானையும்.
613 கரடம் மதம்பாய்[1] சுவடுங் காக்கையும்.
614 கரீரம் யானையின் பல்லடியு மகத்தியும்
முழையு மிடாவு மொழிய லாகும்.
615 கரில்காழ்ப்புங் கொடுமையுங் குற்றமு மாகும்.
616 கரியவன் சனியு மாலு மிந்திரனும்.
617 கருங்கை யின்மையுங் கொன்றுவாழ் [2]தொழிலும்
வன்பணித் தொழிலுங் கன்றிய தொழிலும்
எனுமுத் தொழிலையு மியம்புவ தாகும்.
618 கலமே கலமுந் தோணியும் பூணும்
அலமு முண்கலமும் யாழுமோ ரளவும்.
619 கலிவலி யோனும் சனியுங் கலிப்பாவும்
மிருதியும் வஞ்சமு மோசையுங் கடலும்
கலியுகமும் வலியுங் கழற லாகும்.
620 கலைகால நுட்பமும் காஞ்சியும் கல்வியும்
நாலுங் தூசு மந்தியுஞ் சேகும்
[3]கவடுமொரு ராசியு மதியின் கலையும்
மானேறு மென்ன வழங்க லாகும்.
621 கல்பருப் பதமும் ஓசையுங் கல்லும்
அருவியும் வலமு மறைய லாகும்.
622 கலாமே கொடுமையுஞ் சினமு மாகும்.
623 கல்வி யறிவும் பயிற்சியு மாகும்.
624 கலவை சாந்தும் சேறு மாகும்.
625 கலித்த லொலியும் பொற்பு மெழுச்சியும்.
626 கலுழி கான்யாறுங் கலங்கல் நீரும்.
627 கலிங்கம் ஊர்க்குருவியும் வானம் பாடியும்.
கலிங்க தேசமுஞ் சீலையு மாகும்.
628 கல்லாரம் மஞ்சளுஞ் செங்கழு நீரும்
நீர்க்குளி ரியுமென நிகழ்த்த லாகும்.
629 கலாப மேகலையு மரைமணி வடமும்
மயிலு மயிற்பீலியும் வழங்க லாகும்.
630 கவடு கப்புங் கபடமும் யானையைக்
கட்டுங் கயிறுங் கழற லாகும்.

(பிரதி) 1. கன்னமும். 2. தொழிலினும். 3. குலவுமொரு.

631 கவனம் போருங் கலக்கமுங் காடும்
விரைவும் குதிரையின் கதியும் விளம்புவர்.
632 கவுசிகம் விளக்குத் தண்டும் ஓர்பண்ணும்
கோட்டானும் பட்டுங் கூற லாகும்.
633 கவலை துன்பமுங் கவர்த்த நெறியும்
நோயுங் கொடியுஞ் சந்தியுந் தினையும்
அச்சமு மெனவே யறைய லாகும்.
634 கவந்தம் பேயு நீருஞ் செக்கும்
யூபமு மெனவே உரைக்க லாகும்.
635 கவ்வை யெள்ளி னங்காயுங் காடும்
ஒலியும் பழிமொழியு மட்டுண் பாருமாம்.
636 கவரி சாமரையுந் தேரு மேதியும்
கவரி மாவுங் கழற லாகும்.
637 கவுசி குழைவும் வருத்தமும் பாட்டும்.
638 கவிகை பாட்டு மளித்தலும் பிச்சமும்.
639 கவுந்தி பாண்டவரின் தாயும் மைமையும்.
640 கவிநீர்க் காக்கையும் புலவனும் வெள்ளியும்
மந்தியுங் கவியு மாவாய்க் கருவியும்.
641 கவையா யிலியமுங் காடுங் கவரும்
எள்ளிளங் காயு மிசைக்க லாகும்.
642 கவசங் கடலு மரணு மாகும்.
643 கழல் காலணியுஞ் செருப்புங் காலும்
கழங்கு மெனவே கழற லாகும்.
644 கழிகழி காலையும் மிகுதியுங் கழியும்
கழிமுக மூமெனக் கருத லாகும்.
645 கழை புனர்பூசமுங் கரும்பும் மூங்கிலும்.
646 கழுது பேயும் பரணும் வண்டும்.
647 கழுமல் பற்று மயக்கமு நிறைவும்.
648 கழுமு லாயுதப் பொதுப்பெயருஞ் சூலமும்
கழுக்கடை யுமெனக் கழற லாகும்.
649 கழனி மென்பாலும் வயலு மாகும்.
650 கழுந்தி முத்துங் கழையு மாகும்.
651 கழிதல் சாதலுங் கடந்திடலு மிகுதியும்.
652 கழங்கணங் காடலும் வேல னாடலும்.
இந்திரிய மூங்கழற் காயு மாகும்.
653 கழற விடித்தலும் வார்த்தையு மாகும்.
654 களங்களா மரமு மவையு மிடறும்
கருமையு நஞ்சு நெல்வா ரிடமும்
இல்லாளும் போர்க்களமும் பரப்பு மாகும்.
655 களரி போரிடமுங் கானுங் கருமையும்
கருமஞ் செய்யிடமும் சவையு மிடறும்
கோட்டியுங் களர்நிலமுங் கூற லாகும்.
656 களேபர முடலும் பிணமும் எலும்பும்.
657 கள்ளின வேனிலும் வாவியுஞ் சோர்வும்
மென்பாலுக் தொடர்புங் கள்ளு மாகும்.
658 கள்வன் முசவுங் கருநிறத் தவனும்
யானையு நண்டுஞ் சோரனு மிராசியும்.
659 களைகளை பயிருங் களைக்கோலு மாகும்.
660 களபஞ் சாந்தும் யானையும் கலவையும்.
661 களவன் மரக்கொம்பு நண்டு முசவும்.
662 களிறு பன்றியுங் களிற்று மீனும்
யானையு மத்த னாளுஞ் சுறவும்.
663 களவு களாவுந் திருட்டு மாகும்.
664 களங்கம் அழுக்கும் குற்றமு மாகும்.

665 களகன் மருதநிலமுங் கள்ளுந் தொடர்பும்
பொய்கையு மெனவே புகல லாகும்.
666 களிகள்ளும் குழம்பும் செருக்கும் வடிவும்.
667 கறைகுடி யிறையு முரலுங் கறுப்பும்
இரத்தமும் விடமும் மாசு மாகும்.
668 கறங்கல் வளைதடியும் பேயு மோசையும்
சுழற்றலு மெனவே சொல்ல லாகும்.
669 கறங்கு சுழலலும் வட்டமும் காற்றாடியும்
சத்த வொலியுஞ் சாற்ற லாகும்.
670 கற்புள் ளுயர்த்த பூமியும் கற்பும்
எயிலு முல்லையு மியம்ப லாகும்.
671 கற்பம் பிரம னாயுளுஞ் சுவர்க்கமுங்
கற்பக தருவுங் கழற லாகும்.
672 கறுப்புக் கருமையுஞ் சினக்குறிப்புஞ் சினமும்.
673 கறியே கறியு மிளகு மாகும்.
674 கன்னல் நாழிகை வட்டிலுங் கரும்பும்
குடமும் கரகமு நாழிகையுங் காமமும்
சர்க்கரையு மென்னச் சாற்ற லாகும்.
675 கன்னமோர் தட்டுங் காது மாகும்.
676 கன்னி கன்னிகையு மிராசியு மோரையும்
ஆறு மிளமையு மழிவில்லா மையும்
அத்தமுந் துர்க்கையுங் கற்றா ழையுமாம்.
677 கனவட்டங் குதிரையும் பாண்டியன் குதிரையும்.
678 கன்றுத லீதலுங் கன்றலு மாகும்.
679 கனங்காத் திரமும் புயலும் பாரமும்
வட்டமும் பொன்னுஞ் செறிவுமடை கொடுத்தலும்.
680 கனையே யொலியுஞ் செறிவு மாகும்.
681 கனவு மையலுந் துயிலுங் கனவும்.
682 கன்று மரக்கன்றும் விலங்கின் கன்றும்
கைவளை யுமெனக் கழற லாகும்.
683 கனலி சூரியனுந் தீயும் பன்றியும்.

# யாப்பிலக்கணம்

[175-வது பக்கத் தொடர்ச்சி]

## செய்யுள்—வெண்பா

சென்ற வாரம் வெளிவந்த இதழில் வெண்பாவின் வகைகளுள் குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா என்பனவற்றைக் கற்றோம். இவ்விதழில் இன்னிசை வெண்பா நேரிசைவெண்பா என்பவற்றைப்பற்றிக் கற்போம்.

3. **இன்னிசை வெண்பா:**—முதல் மூன்றடியும் அளவடியாகவும் ஈற்றடி சிந்தடியாகவும் அமைய இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல்லைப் பெறாமல் நடைபெறுவது இன்னிசை வெண்பா என வழங்கப்படும். இரண்டாமடியின் இறுதியில் தனிச் சொல்லைப் பெற்று மூன்று விகற்பத்தால் வருவனவும், மூன்றாமடியின் இறுதியில் தனிச்சொல்லைப் பெற்று இருவிகற்பத்தால் வருவனவும், தனிச்சொல்லைப்பெறாமலே பலவிகற்பமாகி அடிதோறும் ஒரூஉத் தொடை பெற்று வருவனவும், இன்னிசை வெண்பா என்னும் பெயராலேயே வழங்கப்படும்.

(a) துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். —நாலடியார், 2.

இது நான்கடியாய் இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

(b) இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம். —நாலடியார்,36.

இது நான்கடியாய்த் தனிச் சொல் இன்றிப் இரு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

(c) அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின். —நாலடியார், 151.

இஃது இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல்லைப் பெற்று மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

(d) வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போகம் அவரவ ரார்றான்
விளங்காய் திரட்டினார் இல்லைக்—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.” —நாலடியார், 103.

இது மூன்றாமடியின் இறுதியில் தனிச் சொல்லைப் பெற்று, இரு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

(e) இன்னுமை வேண்டின் இரவெழுக—இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.
—நான்மணிக் கடிகை, 17.

இஃது அடிதோறும் தனிச் சொல்லைப் பெற்று மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

(f) மழையின்று மாநிலத்தார்க் கில்லை: மழையும்
தவமிலார் இல்வழி இல்லை: தவமும்
அரசிலார் இல்வழி இல்லை: அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல்.

தனிச்சொல் பெறாமலே பல விகற்பமாகி அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றுவந்த இன்னிசை வெண்பா.
—நான்மணிக் கடிகை, 48.

4. **நேரிசை வெண்பா:**—இஃது இருகுறள் நேரிசை வெண்பா எனவும், ஆசிடை நேரிசை வெண்பா எனவும் இருவகைப்படும். இவற்றுள் இருகுறள் நேரிசை வெண்பா என்பது, இரண்டு குறள் வெண்பாவாய், இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல்லைப் பெற்று, முதலிரண்டடியும் ஒரு விகற்பமாகவும், கடையிரண்டடியும் மற்றொரு விகற்பமாகவும் அமைய நான்கடிகளைக் கொண்டு வருவது; நான்கடிகளும் ஒரு விகற்பமாய் வருவதும் ஆகும். ஆசிடை நேரிசை வெண்பா என்பது, முதற்குறட்பாவின் இறுதிச் சீரோடு ஓரசையேனும் ஈரசையேனும் கூட்டி யுச்சரிக்கப்படுவது. ஒற்றுமைப்படாத உலோகத்துண்டுகளை ஒற்றுமைப்படப் பற்றுப்பொடி (ஆசு) இட்டு உருக்கிப் பொருத்துவது போல முதற் குறட்பாவுக்கும் தனிச்சொல்லுக்கும் இடையில் வேறுபட்டு விட்டு இசைத்தால் கூட்டி வழங்கப்படும் அவ்வசையே ஆசு எனப்படும் என அறிக.

(a) “தடமண்டு தாமரையின் தாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு-பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினான் ஊர்.

இஃது இரு குறள் வெண்பாவாய் இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல்லைப் பெற்று அடிநிரம்பி இரு விகற்பத்தால் வந்த இரு குறள் நேரிசை வெண்பா.

(b) அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு.

இஃது ஒருவிகற்பத்தால் வந்த இரு குறள் நேரிசை வெண்பா.

(c) கருமமு முள்படாப் போகமுந் துவ்வரத்
தருமமும் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.” —நாலடியார், 250.

இது முதற் குறட்பாவின் இறுதிச் சீரோடு ஓரசையால் ஆசிட்டு இரு விகற்பத்தால் வழங்கும் ஆசிடை நேரிசை வெண்பா.



(d) தாமரையின் தாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையி னூற்றமே தானுறும்—தாமரைபோற்
கண்ணன் முகத்தான் கரதலத்தான் சேவடியென்
கண்ணூர்வஞ் செய்யுங் கருத்து.

இது முதற்குறட்பாவின் இறுதிச் சீரோடு ஈரசையால் ஆசிட்டு இரு விகற்பத்தால் வழங்கும் ஆசிடை நேரிசை வெண்பா.

(e) ஆர்த்த அறிவின ராண்டிளைஞ ராயினும்
காத்தோம்பித் தம்மை அடக்குப—மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார்.” —நாலடியார், 351.

(f) வஞ்சியே னென்றவன்றனூருரைத்தான் யானுமவன்
வஞ்சியானென்பதனுல் வாய்நேர்ந்தேன்-வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியேன்என்றுரைத்தும்வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.”

இவை முதற்குறட்பாவின் இறுதிச்சீரோடு ஓரசையாலும் ஈரசையாலும் ஆசிட்டு, ஒரு விகற்பத்தால் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

# காற்று மழை

189143

## Shakespeare—“The Tempest”

அங்கம் 1. களம் 2.

[170-வது பக்கத் தொடர்ச்சி]

ஏரியல் வருகின்றது.

ஏரியல்:—வாழி, வாழி, கெழுதகைத் தலைவா வாழி! சீரிய ஐயனே, சிறந்து வாழி! விழுமியநின் விருப்பினை நிகழ்த்துதற்கியான் வந்துளென். பறக்கவோ, நீந்தவோ, தீயினுள் மூழ்கவோ, சுருள்தரு முகிலின்மீ தூரவோ—கடிய நின் ஆணைக்கு ஏரியலையும் அதனுடைத் திறமை யத்தனையும் பூட்டுவாய்(1).

ப்ராஸ்ப்பீரோ:—நானுனக்குக் கட்டளையிட்ட காற்று மழையைக் கடைவரையில் முடித்தனையே, சாத்த, நீ?

ஏரியல்:—ஒரு சிறிதுங் குறையாமல் (2)—மன்னவனிருந்த மரக்கல மேறினேன். ஈங்கிம் மூக்கிலே, ஆங்கவ் விடையிலே, மேல் தட்டிலே, ஒவ்வோரறையிலே (3) நான், திகைப்புறு மற்புத எரிச்சுடராயினேன்: சிலபோது நான் பிரிந்து பல விடங்களில் எரிந்தனென்; இரண்டாங் கூம்பில், குறுக்கு மரத்தில், வளை தூலத்தில், தனித் தனி எரிவேன், பிறகு கூடிச் சேர்ந்துகொள்வேன் (4). பயமுடை இடியின் வெடிகளுக்கு முன்வரு தூதாம் ஜோவினது மின்னல்கள், இதனினுங் கடிதிற் றோன்றி மறைந்து காட்சிகடப்பனவா யிருந்ததில்லை (5). கந்தக முழக்கத்தின் நெருப்பும் வெடிகளும், வெந்திறல் நெப்ட்யூனை முற்றுகையிட்டு, அவன் வீர அலைகளைக் குலுக்கங்கண்டு, அன்னான் வெருவரு திரிசூலத்தை நடுங்கச்செய்தனபோல் தோன்றின் (6).

ப்ராஸ்ப்பீரோ:—என் தீரமுடைய சாத்தனே! மனத்

ப்ராஸ்ப்பீரோவின் மந்திரப்படி இந்திரஜாலங்களைச் செய்கின்றஅவன் குட்டிச்சாத்தான்களில் தலைமையானது ஏரியல்.

(1) கெழுதகைத்தலைவா - பெருமையும் உரிமையும் வாய்ந்த தலைவனே. விழுமிய விருப்பு - சிறந்த நின்கட்டளை. சுருள்தருமுகிலின்மீது ஊரவோ - சுருண்ட மேகங்களின்மீது ஏறிச் ‘சவாரி’ செய்யவோ.

கடியநின் ஆணை - இயற்றுவதற்குக் கடினமான உன் கட்டளை. ஏரியல் இங்குத் தன்னைப் படர்க்கையில் பேசிக்கொள்கின்றது.

ஆணைக்கு......பூட்டுவாய் - பறந்தோ நீந்தியோ, நெருப்பில் மூழ்கியோ, மேகத்தின்மீது ஏறியோ நான் செய்யவேண்டிய வேலை எவ்வளவு கடினமானதாயிருந்தாலும், அதைச் செய்யும்படி எனக்கு நீ கட்டளையிடலாம்—என்பதுபொருள்.

(2) ‘குறையாமல் முடித்தேன்’—என முடியும்.

(3) மூக்கு, இடை, என்பன, கப்பலின் முன்பாகத்தையும் நடுப்பாகத்தையும் குறிக்கின்றன.

(4) இரண்டாம் கூம்பு - பாய் கட்டுவதற்குக் கப்பலில் நிறுத்தியிருக்கின்ற தூண்களில் இரண்டாவது.

(5) குறுக்குமரம், வளை தூலம் முதலியன, பாயுடன் சேர்த்துக் கூம்பில் கட்டுகின்ற தூலங்கள்.

ஏரியல் ஒன்றே எரிவடிவாகிப் பற்பல பாகமாகப் பிரிந்து வெவ்வேறிடங்களில் தனித்தனி எரிவதும், பிறகு ஒன்றாகச் சேர்ந்து ஓரிடத்திலே அற்புத எரிச்சுடர் போலவும் ஆகிக் கப்பலில் உள்ளவர்களைத் திகைக்கச்செய்தது.

ஜோவ் - உரோமர்களது முதன்மையான கடவுளின் பெயர். இந்த ஜோவ் என்னும் கடவுள், இடியைத் தன் ஆயுதமாகக் கொண்டிருப்பதாகக் கூறுவர். இடிக்குமுன் அடைவது ஜோவின் மின்னல்கள். அம்மின்னல்களைவிட விரைவில் தான் ஆங்காங்குத் தோன்றித் தோன்றி மறைந்து, பார்ப்பவர் கண்களைக்கடந்து தான் கடிதின் அகன்றதாக ஏரியல் கூறுகின்றது—இதனினும்-தான் நெருப்புச் சுடராகத் தோன்றித் தோன்றி மறைந்ததனினும்.

(6) நெப்ட்யூன்—உரோமர்களது போர்க்கடவுள். கடலிற்கு அதிபதி என்று கருதப்படுவதும் இக்கடவுளே. இக்கடவுளின் கையிலிருக்கும் படை திரிசூலம். வெருவரு - அச்சத்தை விளைவிக்கின்ற.

துறு மிம்மலேவு தன் அறிவையும் பற்றுத திட்பமுடன் யாரேனும் நிலேநின்றதுண்டோ? (7).

**ஏரியல்:**—பித்தரின் ஜுரவெறிகொண்டு கையறு மனத்தால் துணிவு மிக்க சேட்டைகள் செய்யாத பிராணியொன்றில்லே (8). கப்பலோட்டிகள் தவிர மற்றவரெல்லோரும், என்னே டெங்கெங்கு மெரிந்திருந்த நாவாயைக் கைவிட்டு, நுரைக்கின்ற உவரியிற் குதித்துவிட்டனர் (9). மன்னவன் மைந்தன், பார்டினண்ட், உரோமங்கள் நெறித்துமேல் நிமிர—அப்பொழுது நாணல் போன்றன, உரோமமன்று (10)—குதித்த மனிதர்களில் முதல்வனுவான்; "எல்லாப் பேய்களும் இங்கே இருக்க, நரகம் வெறுமைய தாயிற்று" என்று கூவினுனவன். (11)

**ப்ராஸ்ப்பீரோ:**—ஆகா, இதுவன்றே என் சாத்தன் (12)! நன்று. இது கரையினிற் கருகிலன்றே? (13).

**ஏரியல்:**—மிக அருகில், என் தலேவ.

**ப்ராஸ்ப்பீரோ:**—மற்று, ஏரியல், அவர்கள் தீதின்றி இருக்கின்றனரோ?

**ஏரியல்:**—உரோமம் ஒன்று அழியவில்லே. தாங்கிய அவர்தம் ஆடைகளில் ஒரு கறையின்றி, முன்னினும் புதியனவா யிருக்கின்றன. நீ கட்டளேயிட்டபடி, அவர்களேக் கூட்டங்கூட்டமாய் இத் தீவில் அங்கு மிங்கும் பிரித்துச் சிதறிவிட்டேன். அரசனது புதல்வன், அவனே நான் தனியாகக் கரை சேர்த்து, இத்தீவின் ஓர் தனி மூலேயில் தன் கைகளே இப்படித் துன்பமுடன் பிணித்து உட்கார்ந்து காற்றினேத் தன் பெருமூச்சினுல் ஆற்றிக்கொண்டிருக்க விட்டுவந்துளேன் (14).

**ப்ராஸ்ப்பீரோ:**—அரசனது கப்பலேப்பற்றி, மாலுமிகள், சொல், என்ன செய்து வைத்திருக்கின்றுய்-உடன்வந்த மற்றைய கப்பல்கள் எல்லாவற்றையும்? (15)

கந்தகம்போல் தான் பற்றியெரிந்து முழங்கிய வெடியொலி நெப்ட்யூனேயும் நடுங்கச்செய்ததுபோல் தோன்றியது என ஏரியல் கூறுகின்றது.

(7) நீசெய்த இவ்விசயக் குழப்பத்தைக் கண்டு திகைத்து அறிவு மருளாமல் யாரேனும் இருந்தனரோ?—என்பது பொருள்.

(8) கையறு மனத்தால் துணிதலாவது—வேறு வழியில்லேயென்று எல்லா ஆபத்திற்கும் துணிந்து உயிர்தப்புவதற்கு முயலுதல்.

(9) நாவாய்—கப்பல். உவரி—கடல். நான் நெருப்பாகித் தோன்றிய தோற்றத்தால் எல்லாப் பாகமும் எரிவதுபோல் தென்பட்ட கப்பலேத் துறைந்து, மாலுமிகளேத் தவிர, ஏனேயோர் பொங்குகின்ற கடலிற் குதித்துவிட்டனர்—என்பது பொருள்.

(10) பயத்தினுல் மெய்சிலிர்த்து மயிர்க்குச்செறிந்த பார்டினண்டைப் பார்த்தால் அப்பொழுது அவன் மீது நாணல் முளேத்திருந்ததுபோல் தோன்றிதேயல்லாமல் மயிர் முளேத்திருந்ததுபோல் தோன்றவில்லே—என்பது பொருள்.

(11) இந்த முழக்கமும் குழப்பமும் பேய்களால் செய்யப்படுகின்றனவென்றும், நரகத்திலுள்ள அத்தனே பேய்களும் வந்தாலன்றி இவ்வளவு முழக்கம் விளேய இயலாதென்றும், ஆகையால் அப்பொழுது நரகம் 'காலி'யாயிருக்கவேண்டுமென்றும், பார்டினண்டு கூவினுன்—என்பது பொருள்.

(12) என்று ஏரியலின் திறமையை வியந்து பாராட்டினுர்.

(13) நிகழ்ந்தது, என முடித்துக்கொள்க.

(14) "இப்படி"-பார்டினண்ட் துயரமுடன் கைகளேக் கட்டிக்கொண்டிருந்த விதத்தினே ஏரியல் தன்னுடைய கைகளேக் கட்டிக்கொண்டு ப்ராஸ்ப்பீரோவிற்குக் காட்டுகின்றது.

காற்றினேப் பெருமூச்சால் ஆற்றுவது-ஒன்றன்பின் ஒன்றுகப் பார்டினண்ட் பெருமூச்சு விடுவது, வெப்பமாயிருந்த காற்றை ஊதி ஊதி அவன் ஆற்றுவதுபோல் இருந்தது என்பது பொருள்.

(15) மற்றைய கப்பல்களேயும் என்ன செய்து வைத்திருக்கின்றுய்—என்று முடித்துக்கொள்க.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள்:

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |



தைலங்கள்:

| | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. | 1-0-0 |
| அமிர்தாமலக " | 0-12-0 |
| பிருங்காமலக " | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
டை. ச்யாவனப்ராசா
டை. பிருங்காமலக தைலம்
கோரோஜனே மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) டை. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

டை. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்த சிற்றுமணக்கு எண்ணெய் காஸ்டாலஸ்
ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]



சென்னேத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளேயவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களே விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனேத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.
விலே ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினே விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களே யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலே ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளே ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனேத்துங் கொடுக்கப் பெற்றது. விலே ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணேக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளேப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணே மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களேச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலே அணு 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களே யுடையது; பல அனுபந்தங்களே யுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலே ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனுர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணே; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலேமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலே ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலே ரூபா 0-8-0

தினகரமாலே யென்னும்-தினகரவெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களேக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளே, B.A., B.L.,
விலே அணு 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னே.

திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களேயும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றேன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளேக்கக் கூடியது. புத்தகசாலே, வாசக சாலேகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானுய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருந. பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலே ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலேய சைவசித்தாந்த சங்கம், துவாலாலம்பூர்.
2 சோதிடவிலாச புத்தகசாலே, கோக்குவில் யாழ்ப்பாணம்.
3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளே, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னே.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C. C. S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM
Purasawalkam, Madras.

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேத வியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ப்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. கள்ளாள் கதை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஃகாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்டவோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.



# வர்த்தமானம்

**ஜப்பானில் பூகம்பம்:**— ஜப்பானியத் தீவுகளில் மார்ச்சு மாதம் 3-ந்தேதியன்று ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டு ஏறக்குறைய 300மைல் நிலப்பரப்பு நாசமாயிற்று என்றும், அதோடு கடலும் பொங்கிய தென்றும் டோக்கியோச் செய்தி யொன்று கூறுகின்றது. இதனால் இதுவரை 6500 வீடுகள் சேதமாயின என்று தெரியவந்துளது. உயிர்ச்சேதமும் அதிகம். சில தீவுகளில் கடல் ஜலம் புகுந்துளதென்றும் தெரிகின்றது.

***

**ஜேர்மனியில் பொதுவுடைமைக் கட்சி:**—ஜெர்மனியில் பொதுவுடைமைக் கட்சியாரின் கிளர்ச்சி சிறிது காலமாக வளர்ந்து வருகின்றது. மார்ச் மாதம் 1-ந் தேதி ஜெர்மன் அரசாங்கத்தார் இவ்வியக்கத்தைத் தடுக்கும்பொருட்டு 200 பேர்களைக் கைது செய்தனர். பொதுவுடைமைக் கட்சிக்குச் சொந்தமான பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன. இப்படிக் கைதுசெய்யப் பட்டவர்களில் இந்தியர் ஒருவராவாராம். அவர் பெயர் ஜகதாஸ் நாயுடு என்றும் அவர் ஹைதராபாத்தைச் சேர்ந்தவரென்றும் தெரிகின்றது.

***

**அகில இந்திய சாது மஹா சங்கம்:**— 1933-வது வருடம் மார்ச் மாதம் 9, 10, 11 தேதிகளில் அகில இந்திய சாது மஹாசங்கத்தைக் கும்பகோணத்தில் நடத்த ஸ்வாமி கருணாநந்தர் முயன்று வருகின்றார். அப்பொழுது பெரியோர் பலர் ஆத்மஞானத்திற் குரிய விஷயங்களைப்பற்றிப் பேசுவார்கள் என்று கும்பகோணச் செய்தி கூறுகின்றது.

***

**இந்திய அரசாங்க வரவுசெலவுத் திட்டம்:**—இந்தியச் சட்டசபையின்முன் ஸர் ஜியார்ஜ் ஷூஸ்டர் கொண்டு வந்த 1933-34-வது வருட வரவு செலவுத் திட்டச் சுருக்கம் வருமாறு:—நடக்கின்ற வருஷத்தில் எதிர்பாராதபடி விலை வாசிகள் குறைந்துவிட்டதால் வருமானத்திலும் குறைவு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. '1933-வது வருட ஆரம்பத்தில் 5,50,000 டன் சர்க்கரை இறக்குமதியாகுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுவரை 4,35,000 டன் சர்க்கரைதான் இறக்குமதி யாயுள்ளது. இச்சர்க்கரை வியாபார மூலம் 10 கோடி ரூ. வருமானம் எதிர்பார்க்கப்பட்டதற்கு $7\frac{1}{2}$ கோடிதான் கிடைத்துளது. மோட்டார்க்கார், மோட்டார் சைகில் இவைகளின் வியாபாரமும் குறைந்துளது. எனவே இவைகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானமும் குறைந்துளது. மோட்டார் வியாபார மூலம் 60 லட்சம் வருமானமே கிடைத்துளது.

'சாராயம், புகையிலை, வாசனை சாமான்கள் முதலிய சுகானுபவ சாமான்களின் வியாபாரமும் மிகவும் குறைந்துளது. இப்பொழுது இவைகள் மூலம் 125 லக்ஷமே வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவிலேயே இப்பொழுது சிகரெட்டுகள் செய்யப்படுகின்றன. எனவே சிகரெட்டு இறக்குமதியும் அவைகளால் ஏற்படும் வருமானமும் மிகவும் குறைந்துவிடும். இன்னபடி வருமானங்கள் குறைந்திருப்பதால் அதற்குத் தகுந்தபடி திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

உத்தியோகப் பற்றிலாதார் இராணுவச் செலவைக் குறைக்கவேண்டும் என்று அபிப்பிராயம் கூறினர்.

***

**தீண்டாமை:**—தீண்டாமை விலக்கு விஷயமாய்க் காந்தியடிகளுக்கும் ஸ்ரீ மதன்மோகன மாளவியாவிற்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுளதெனத் தெரிகின்றது. ஸ்ரீ மாளவியா மதசம்பந்தமான விஷயங்களில் சட்டம் செய்தல் கூடாதென்றும், ஜனத்தலைவர்களின் பிரசார முயற்சியால் தீண்டாமை அகலவேண்டுமென்றும், தமது முயற்சியால் பலகோயில்கள் பஞ்சமர்களுக்குத் திறந்துவிடப்பெற்றுளவென்றும் கூறுகின்றார். காந்தியடிகள் சட்டபூர்வமாகத் தீண்டாமையை விலக்கினாற்றான் சீக்கிரத்தில் நமது சமூகத்திலிருந்து தீண்டாமை யகலுமென்றும், எனவே சட்டம் வேண்டியதே என்றும் கூறுகின்றார். இவ்வாறு இந்த இருபெரும் தலைவர்களும் இவ்விஷயத்தில் மாறுபாடு கொண்டிருக்கின்றனர்.

***

**நகர சபை நடைமுறை:**—சமீபத்தில் இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூலில் அவ்வூர் நகரசபை கூடிற்று. அன்று வேலையில்லாதார் விஷயமான தீர்மானம் ஒன்று சபையின்முன் தொழிற் கட்சியினரால் பிரேரேபிக்கப்பட்டது. அன்று சபையில் கோரம் இல்லாததால் இவ்விஷயத்தை எடுத்து முடிவுசெய்ய முடியாது என்று தலைவர் கூற, தொழிற் கட்சியினர் எழுந்து சிகப்புக் கொடியோடு பாடினராம். கன்ஸர்வேடிவ் கட்சியினர் தேசியக் கொடிப்பாட்டைப் பாடினராம். இதனால் இருகட்சியினருக்கும் பூசல் வளரப் போலீசார் வந்து அமைதியை உண்டாக்கினராம்.

***

**சிவில் சர்விஸ் பரிட்சை:**—1932-வது ஆண்டில் லண்டனில் நடந்த இந்திய சிவில் சர்விஸ் பரிட்சையில் தேறிய இந்தியர்:—K. ராதாகிருஷ்ணன், G. சாமுவேல், B. A. கோபாலகிருஷ்ணன், R. A. மஹாமதி; J. நாராயணன், T. S. ஜோஷி, K. G. மீனன் G. V. பெதிகர், J. R. பால், S. F. ஹாஸன், S. N. மித்ரா, A. T. பண்டிட்.

***

**புத்தக வரவு:**—தமிழர்களுக்கு ஒரு தாக்கீது அல்லது ஹிதோபதேசம் என்னும் சிறுநூல் ஒன்று இரங்கோன் நவீனகதா புத்தக சாலையினரால் எமது பார்வைக்கு அனுப்பப்பெற்றது. இதனில் எல்லோலோரும் திடகாத்திரராயும் மனச்சந்தோஷத்தோடும் வாழ்வதற்குக்கடைப்பிடித்தொழுகவேண்டிய 16உபதேசங்கள் கூறப்பெற்றிருக்கின்றன. காலையில் எழுந்து நடக்கவேண்டும், ஸ்நானம் செய்யவேண்டும், கடன் வாங்குதல் கூடாது, கோபத்தை விடவேண்டும், காப்பிக்கடைப் பலகாரங்களை வாங்கித்தின்னல் கூடாது, வரவுக்கு விஞ்சிய செலவு கூடாது என்பன போன்ற உபதேசங்கள் விரிவாகக் கூறப்பெற்றிருக்கின்றன. ஒருஅணா ஸ்டாம்பு அனுப்பினால்மேற்படி புத்தக சாலையினர் இச்சிறு நூலை இலவசமாய் அனுப்பித்தருவார்கள்.

***

**அமேரிக்காவில் தற்கொலை:**—அமெரிக்க ஐக்கிய நாட்டில் வறுமையின் காரணத்தாலும் வாழ்க்கையில் ஏற்படும் சலிப்பின் கரரணத்தாலும், வேறுபல காரணங்களாலும் சென்ற வருஷத்தில் மட்டும் சற்றேறக்குறைய 20 ஆயிரம் பேர் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று கணக்கு எடுக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வாறு நடக்கும் தற்கொலையைத் தடுப்பதற்கு அமெரிக்காவில் தற்கொலை விலக்குச் சங்கமொன்று இருக்கின்றது. இச்சங்கத்தை நிறுவினவரும், சென்ற 20 ஆண்டுகளாக தற்கொலைத் தடுப்புப்பிரசாரம் செய்து வருபவருமான M. H. வாரன் என்பவர் 20 ஆயிரம் தற்கொலையைத் தவிர்த்திருக்கின்றாராம்.

***

**எழுபது வயதில் வக்கீல்தொழில்.**-காக்ஸோன்என்னும் ஐரோப்பிய மாதும் அவர் புருஷனை மேஜர் காக்ஸோனும் 70 வயதிற்கு மேல் வக்கீல் பரிட்சையில் தேறிச் சமீபத்தில் வக்கீல்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டனர் என்று அயல்நாட்டுச் செய்தி யொன்று கூறுகின்றது.

KALANILAYAM
Reg. No. M. 2324.


## — கம்ப ராமாயணம் —

### பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலாநிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

**ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்**

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 58 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனாம்! ஆரோக்கிய கிரந்தம் இனாம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

**கற்பக மலர் (சிறு கதைகள்)**
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதி பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

ஒரு முக்கிய சங்கீத நூல்
**"வர்ணமாலிகை"**

சங்கீத ஆசிரியர்களுக்கும் கர்னாடக சங்கீதம் அப்பியசிக்கிறவர்களுக்கும் வேண்டிய நூல். ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் சங்கீத பாடசாலைகளிலும் இருக்க வேண்டியது. 40 ராகங்களுக்கு லக்ஷணங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 12.

வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதராஸ்.

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—
R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)